தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆவணி 6 (22-8-'59). சனிக்கிழமை | இதழ் 10



எள்ளி நகையாடுது இலங்கையின் முத்திரை!

விரைந்து கிழியுது தில்லியின் முகத்திரை!

''வௌவால் மொழிக்காரர்க''ளின் கை ஓங்கி நிற்கும், காலம் இது! பூத்த புதுமையோ, மூத்த பழைமையோ இல்லை இந்தியில்; செத்த மொழி ஒன்றின் பிணத்தில் புழுத்த புழு அது! இலக்கிய வளமோ, அறிவியல் பரப்போ அதில் இல்லை. என்றாலும் அதற்கு ஆட்சி மொழி என்ற மணிமுடி! அதில் வளம் இல்லை! ஆனாலும்...வளமுள்ள மொழி ஆட்சியில் இல்லை; அதனால் அதற்கு ஒரு மதிப்பும் இல்லை!

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ளோர் யாவரும் ஒத்தவர் என்கின்றனர். துணைக்கண்டத்து மொழிகள் அத்துணைக்கும் ஒரே மதிப்பு என்கின்றனர்! ஞான பண்டிதர் நேரு இதைச் சொன்ன மறு விநாடியே துந்துபி, காளம், முரசம், தப்புரா, சப்ளாக்கட்டை, தகர டப்பா, கிழிந்தவாய் முதலிய வற்றோடு இந்திப் படை கிளம்புகிறது; ஊர் ஊராய்ச் சுற்றுகிறது. ''தெரியுமோ சேதி! நேருப் பண்டிதாளே சொல்லிட்டா...நேத்திக்கும் இன்னிக்கும் நாளைக்கும் இந்திய மொழிகளுக்கெல்லாம் ஒரே மதிப்புத்தான், போங்கோ!'' என்று தெருவுக்குத் தெரு முழங்குகிறது. சில ''திருப்பதி மாடுக''ளும் தலையாட்டுகின்றன.

அந்த நேரத்தில் நாம் கேட்கிறோம்; ''எல்லா மொழிக்கும் ஒரே மதிப்பென்றால், அஞ்சலட்டைகளில்-கூடுகளில்-பணவிடைத் தாள்களில் எல்லாம் இந்தி மொழியே இருப்பது ஏன்? வட்டார மொழிகளிலேயே அச்சிட்டுத் தந்தால் என்ன?''

''நமது நாட்டின் பொருள் நிலை என்ன? பதினான்கு தேசிய மொழிகளையும் ஒரே அட்டையில் அடிக்க இடம் கொள்ளாதே! ஒவ்வொரு மொழிக்கும் தனித் தனித் தாள் அச்சடித்துத் தருவதென்றால், பல இலட்சங்கள் வேண்டுமே! படைச் செலவுக்கே பணமின்றித் திண்டாடும் நாங்கள் எங்கே போவோம்? வளரும் பாரதத்திற்குப் பகையாயிற்றே, இந்த அதிகச் செலவுகள்!'' என்று தில்லி அரசின் அமைச்சர் பேசினார்; பேசுகிறார்!

பணம் வீணாகுமாம்; அதிகச் செலவாகுமாம்; ஆட்சிக்குத் துன்பமாம்! ஆகா! காந்திக்குல்லாய்க்குள்ளே எத்துணை பெரிய ''உலக்கைக் கொழுந்து புத்தி'' புதையுண்டு கிடக்கிறது! உடனே அவர்களைக் கண்டுபிடித்து, அந்த அறிவைத் தோண்டி யெடுத்து, கீழ்ப்பாக்கத்து வாசிகளுக்குப் பிச்சை போடுங்கள். அப்போதுதான் அந்த அமைச்சர்களின் மண்டைகள் வெடித்துச் சிதறாமலிருக்கும்!...

அமைச்சர்கள் இப்படிக் கண்ணை மறைக்கும் வேலை காட்டி வருவதைக் கண்டதும், ஈழத்துப் பெரியவர் ஒருவர் நமக்கு ஒரு செய்தி சொன்னார். ''இந்தியாவின் கண்ணீர்த் துளி'' என்று ஆங்கிலேயர் குறிக்கும் அளவு சிறிய நாடு, சிங்கள நாடு! தமிழர்களைத் தம் பகைவர்களாய் நினைத்து விரட்டுவோர் சிங்களவர். போக்குவரத்து வண்டிகளில் சிங்கள எழுத்துக்கூடாதென்ற தமிழர்களைக் கொன்றோர், அன்னார். ஆனால் அவர்கள்கூட, தங்களரசின் அஞ்சல் தலைகளில் சிங்களத்திற்கு அடுத்துத் தமிழைப் பொறித்திருக்கின்றனர். தமிழுக்குப் பின்தான் ஆங்கிலம்கூட அமைகிறது. கண்டீரோ சின்னச் சிங்களத்தின் அஞ்சல் தலைகளை? காணாதோர் அருகிருக்கும் படம் காண்க. வலக்கையும் இடக்கையும் மலர் தாங்க, மகிழ்ந்திருக்கும் சிங்கள மங்கையின் மேலே ''**சதம்**'' என்ற தமிழ் உருவம்; கீழே ''**இலங்கை**''-தமிழ்ச் சொல்! காணுதார் இதைக் காண்பதோடு தில்லி அமைச்சருக்கும் இதைக் காட்டி விளக்கம் சொல்லுங்கள்!

''36 கோடி மக்களை ஆள்கின்றவரே! 85 இலட்சம் வாழும் சிங்களத்தின் முத்திரையில், மூன்று மொழிகள்! 400,500 கோடிக்கு மேல் நிதி நிலை அறிக்கை படிக்கும் வௌவால்களே! ஏழெட்டு கோடிக்கே நிதி நிலை அறிக்கை தரும் சிங்களம் குத்துகிறது, மூன்று மொழிகளில் முத்திரை! உங்களுக்கேன் முடியவில்லை? இன்னும் ஏன் அமைதி? பதினான்கு மொழிகளுக்கும் ஒத்த மதிப்புத்தராத உங்களையா உடன் பிறந்தார் என்பது? முடியாது! முடியாது! இனியும் உங்கள் போலி உரை எங்கள் நெஞ்சில் படியாது!''—உங்கள் நாவிலிருந்து இந்த முழக்கம் கிளம்பட்டும்; வடவர் நெஞ்சம் கலங்கிப் புலம்பட்டும்!

மா. பாண்டியன்



கி. சந்திரசேகரன்,
திருக்குடந்தை.

"ரெவினியூ இலாகா" சம்பந்தப்பட்ட சொற்களெல்லாம் வேற்றுமொழி சொற்களாகவே இருக்கின்றனவே - ஏன்?

ஆற்காட்டு நவாபுகளின் ஆட்சிக் காலங்களில் உருதுச் சொற்கள் பல, நிலப் பகுதக்கெனப் பயன்படுத்தப்பட்டன. பிரிவுகள் இலாகாக்கள் என்று அழைக்கப்பட்டன. மற்றும் கிஸ்தி, வஜா, ஜாரி, வாய்தா, கலால், தஸ்தாவேஜு ஐவேஜு போன்ற உருது - வடமொழி வார்த்தைகள், ஆட்சித் துறையில் எல்லாப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இன்றும் ஆட்சித் துறையினர் தங்கள் அறிக்கைகளிலும் வெளியீடுகளிலும் நவாபுகள் காலத்துச் சொற்களையே பயன்படுத்தி வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட காலம்வரை, தென்னாட்டின் பெரும் பகுதியைத் தங்கள் கைக்குள் வைத்துக்கொண்டிருந்த நவாபுகள் வருமானம் வரும் இடங்களிலெல்லாம் தங்கள் சொற்களையே கையாண்டு வந்ததால் தென்னாடு முழுவதிலுமே பரவலாக இச்சொற்கள் வழங்கப் பெற்றன. மேலும் இவை கிராமங்களோடு அதிகத் தொடர்பு கொண்டிருந்தமையால், இன்றும் அழியாமல் நிலைத்து நிற்கின்றன.

★

இரா. மதுரைமன்னன்,
மதுரை.

"பஞ்சாயத்து" என்ற சொல்லின் மூலம் என்ன? வழக்குத் தீர்ப்பவர்களைப் பஞ்சாயத்தார் என்கிறார்கள். "ஊராட்சி மன்ற"த்தை "பஞ்சாயத்து போர்டு" என்கிறார்கள். ஆனால் ஊராட்சி செய்வோர் வழக்குத் தீர்ப்பதில்லை. ஏன் இந்தக் குழப்பம்?

முன்னாளில் அரசவைகளில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என இரண்டு பிரிவுகள் இருந்தன. முன்னதில் ஐவரும், பின்னதில் எண்மரும் இருந்தனர். அமைச்சர் புரோகிதர், தளபதி தூதுவர், சாரணர் அடங்கியது ஐம்பெருங்குழு. கரணத்தியல்வர், கருமாதிகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை மறவர் அடங்கியது எண்பேராயம். எண்பேராயத்தில் நகர மாந்தர் இடம்பெற்றிருப்பதால், ஊராட்சி மன்றம் போன்ற ஓர் அமைப்பாக இருந்திருக்கலாம். பதின்மூன்று பேர் நீதிபதிகளாக இருந்து வழக்குத் தீர்க்கும் முறை, தமிழக வரலாற்றிற் காணப்படுகிறது. அண்மைக் காலம் வரையில் முகவை மாவட்டக் கிராமங்களில் இம்முறை இருந்து வந்திருக்கின்றது. ஐம்பெருங் குழுவின் "ஐந்தும்" எண்பேராயத்தின் "ஆய"மும் சேர்ந்து ஐந்தாயமாகி, வடமொழித் தொடர்பினால் பஞ்சாயமாகி இருக்கலாம். பஞ்சாயத்தாராக வருவோர், கிட்டத்தட்ட ஊரை ஆளும் நிலையிலேயே இருந்திருக்கின்றனர். அதனால் பிற்காலங்களில் "பஞ்சாயத்து" என்ற வார்த்தை "ஊராட்சி"க்குப் பயன்பட்டிருக்கலாம். இன்றும் மறவர் நாட்டில் காணப்படும் நடைமுறையை வைத்து, நான் காணும் முடிவுதான் இது. இதற்கு வேறு வழக்குகளும் இருத்தல் கூடும்.

★

தென்றல்தாசன்,
முருங்கப்பட்டி.

"கம்பெனியார்" என்ற வார்த்தையிலிருந்து "கும்பினியார்" என்ற வார்த்தை வந்ததா?

ஆமாம். பிறமொழியறியாத கிராம மக்கள் பிறமொழிச் சொற்களை வழூஉத்தன்மையில் வழங்குவது வழக்கம். "சினிமா"வை, "சீனிமா" என்றும், "ஸ்கூல்" என்பதை "இஸ்கூல்" என்றும் வழங்குதல்போல் "கம்பெனி"யைக் "கும்பினி" என்று வழங்கினார்கள்.

★

கோ இளந்திரையன்,
சித்துக்காடு.

பெண்களைச் சிலர் "ஏய்" என்று அழைக்கின்றனரே! இலக்கியப்படி சரியா?

இலக்கியங்களில் இந்தச் சொல் இருக்கிறதா என்பது தெரியவில்லை. நெல்லை மாவட்டத்தில் "ஏ'ட்டி" என்றும், முகவை மாவட்டத்தில் "ஏய்", "என்னங்'றேன்" என்றும், சில பகுதிகளில் "ஏலா" என்றும், மற்றும் சில இடங்களில் "ஏபிள்ளை" என்றும் அழைக்கிறார்கள். பெரும்பாலும் கணவன்மார் மனைவியரை அழைப்பதற்கு "ஏ"என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். இதுவழக்கில் உருவான சொல்லாக இருக்கக்கூடும். சொல் மென்மையாக இருப்பதால் இலக்கியங்களில் இல்லாவிடினும் இச்சொல்லை ஏற்றுக்கொள்ளலாம்.

★

சுப்பையா, மணமேல்குடி.

"வேண்டுதல் வேண்டாமை
இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல!"
என்ற குறள்வெண்பாவைச் சீர் பிரித்து, தளை கண்டுபிடித்தால், "வேண்டாமை"க்கும் "இலானடி"க்கும் இடையில் ஏற்படும் தளை கலித்தளையாகும். வெண்பாவில் கலித்தளை வரக்கூடாது. எப்படி வந்தது?

குறளை வெண்பா இனத்தோடு சேர்த்து எண்ணுவதற்கில்லையென்று சிலர் கூறுகிறார்கள். "வெண்பா இனமே!" என்று சிலர் வாதிடுகிறார்கள். ஒரு சில குறட்பாக்கள்தான் வெண்பாவிலிருந்து மாறுபட்டுச் சிறிது ஐயப்பாட்டைக் கிளப்புகின்றன. இருப்பினும் இலக்கண நூல் வல்லார் இதனை ஆராய்ந்து உரைத்தல் நலம்.

அன்புநெறி, தமிழ்நாடு.

திராவிட எழுத்தாளர் சங்கம் ஆரம்பிப்பீர்களா?

எனக்கு அந்த ஆசை இருந்தது. ஆனால் கட்சிக் கண்ணோட்டத்தோடு அது காணப்படும் என்றே அவ்வாசையை விடுத்தேன். பல மொழி எழுத்தாளர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினையும், நூல்களுக்கு அரசினரின் பரிசு பெறும் வாய்ப்பினையும், சில மொழிகளில் மொழி பெயர்க்கும் வாய்ப்பினையும் தமிழ் எழுத்தாளர் சங்கம் பெற்றிருப்பதுபோல் திராவிட எழுத்தாளர் சங்கம் பெறமுடியாது. "திராவிட" என்ற வார்த்தையைக் கண்டால் ஆட்சியாளருக்கு அவ்வளவு பயம். 400-க்குமேற்பட்ட எழுத்தாளர்கள் நம்மோடு இருக்கிறார்கள் அவர்கள் அனைவரும் உடனடியாகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராதல் வேண்டும். இப்பொழுது மேற்படி சங்கத்தில் பெரும்பாலும் மொழி பெயர்ப்பாளர்கள்தான் உறுப்பினர்களாய் இருக்கின்றனர். நாம் அதைக் கைப்பற்றமுடியும்.

கழகம் என்பது வடமொழிச் சொல்லா?

வடமொழியின் அடிவருடிகள் சிலர் தம் கட்சியையும் "கழகம்" என்றழைப்பதால் உமக்கு இந்த ஐயம் வந்ததா?

நீங்கள் எந்த வருடத்தில் இயக்கத்தில் சேர்ந்தீர்கள்?

1949!

★

சோ. பெருமாள், மலாயா.

அஞ்சா நெஞ்சன் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் சில காலமாகக் கழகக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்து கொள்வதில்லையே—ஏன்?

ஒரு கூட்டமைப்பு செய்ய முடியாத செயலை, அந்தத் தனி மனிதரே செய்துவருகிறார். பெரிய அளவில் ஒரு தினசரி நடத்துவதென்பது சிறிய வேலையல்ல! அதற்கென அவர் முழுநேரம் ஒதுக்குவதை நாம் அனுமதித்தே ஆகவேண்டும்.

★

இரா. சேதுபதி, கொழும்பு.

"தினத்தந்தி"யும் "தனியரசு"ம் ஒரே மாதிரிப் பத்திரிகைகளா?

தயவுசெய்து கண்ணைக் கெடுக்கும் கண்ணாடியைக் கழற்றி விட்டுப் பாருங்கள்!

சா. நடனமணி, சென்னை-12.

"தனியரசு" 5-8-'59 இதழில் வெளியான தங்கள் சொற்பொழிவில் "கண்ணகிக்குக் கற்கொணர்ந்தான் கரிகாற்பெருவளத்தான்!" என்றிருக்கிறதே- அப்படியா பேசினீர்கள்?

தமிழகத்துக் குருடனுக்கும் தெரிந்த ஒன்று—நானே பலமுறை எழுதியும் பேசியும் சலித்துப் போன ஒன்று - கண்ணகிக்குக் கற்கொணர்ந்தவன் சேரன் செங்குட்டுவன் என்பது. "தனியரசு" குறிப்பாளரிடமும் தவறில்லை. அச்சுக்கு எழுத்தடுக்குவோர் ஒரு முழு வரியை அப்படியே விட்டுவிட்டார்கள்! "கண்ணகிக்குக் கற்கொணர்ந்தான் சேரகுலத் தோன்றல். காவிரியில் அணைகட்டினன் கரிகாற்பெருவளத்தான்!" என்று பேசியதில் நடுப்பகுதி அப்படியே அச்சில் விடுபட்டுப் போய் விட்டது. அவ்வளவுதான்!

★

கண்ணதாசன் பதில் தருகிறார்.

மன. சுந்தரம், சோழவந்தான்.

ஓர் எட்டின் ஆவணித் திங்கள் இதழில் 21-ம் பக்கத்தில் கவி கா. மு. ஷெரீப் என்பவர் எழுதியிருக்கிற கவிதையில் வரும்— "வீடுயின்றி", "பாடுயின்றி", "சோறுயின்றி" என்ற வார்த்தைகளில் வரும் புணர்ச்சிவிதி எவ்வகையின்பாற்பட்டது? அகத்தியமா? தொல்காப்பியமா? அதற்குப் பிற்பட்ட எந்த இலக்கண விதியைப் பின்பற்றியது? "தேடியோடுறார்" "சுற்றுறார்", "கொள்ளுறார்", "போடுறார்" முதலியவை தமிழ்தானா?

உயிர் மெய்யில் வரும் குற்றியலுகரம் மற்றொரு உயிரோடு புணரும்போது மறைந்துவிடுவதுதான் இலக்கணம். "வீடின்றி", "பாடின்றி", "சோறின்றி" என்றே வர வேண்டும். தோழர் ஷெரீப்பின் "கவிதை(?)கள்" இலக்கணத்திற்கு மட்டுமல்ல. ஓசைக்கும் அடங்குவதில்லை! அவரை மற்றவர்கள் கவி என்று ஒப்புக்கொள்வதில்லை போல் தோன்றுகிறது. அதனால்தான் கையெழுத்திலேயே "கவி" என்று சேர்த்துக்கொண்டுள்ளார்!

★

கனகசபாபதி, மதுரை.

எனது வடமொழிப் பெயரை, தமிழில் மொழி பெயர்க்க!

பொன்னவைக்கோ!

பூவிருந்தவல்லி மாநாட்டில்

புரட்சி நாடகப் பேரவை

அளிக்கும்

கண்ணதாசன்

நடிக்கும்

"குற்றம் குற்றமே!"

நாடகம் நடைபெறும்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 22–8–'59 | இதழ் 10

எங்கள் படையின் எழுச்சி காணீர்!

படை மறவரின் அணிவகுப்பைக் காணவேண்டுமெனில், செங்குருதி சிந்தும் வெங்களத்திற்குத் தம்மை ஒப்படைக்கும் பொங்கும் மறக்குலத்தார் திரண்டு நிற்கும் காட்சியைப் பார்க்கவேண்டுமெனில், திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டைப் பாருங்கள்! "திண்டோள் மறவர்களின் வெற்றி முழக்கம்-தீய நிகழ்ச்சிகளை மாய்க்கும் தூயோர் கூட்டம், திரண்டெழுந்தார்க்கும் எழிற்காட்சி" எனப் பல புகழுக்குரியன, தி. மு. கழக மாநாடுகள். நெஞ்சையள்ளும் கருத்துரைகளும், பகை குமைக்கும் வீரச் சுவடிகளும் அம்மாநாடுகளில் தான் தரப்படுகின்றன.

வேறு சிலர் உண்டு. வேலையற்ற தம் இழிநிலையை மறைப்பதற்காக ஏதேனும் மாநாடு கூட்டுவர். பெற்ற கூலிக்காக மாநாடென்று ஒன்று கூட்டுவர்; வாய் கிழியப் பேசுவர்!

திராவிடர்கள் நடத்தும் மாநாடும் சரி - பொதுக்கூட்டமும் சரி - பிற நிகழ்ச்சிகளும் சரி, நாட்டு நிலையைச் சிந்திப்பதற்காகவே கூடுகின்றன! இங்கே தொண்டர் முதல் மாநாட்டுத் தலைவர் வரை யாரும் வேண்டாத பேச்சுக்களில் இறங்குவதில்லை! ஒவ்வொருவனும் தன் உள்ளத்தில் பட்டதை நிரல்படத் தொகுத்துத் தருவான்; ஊரின் நலத்திற்காக மொழியின் பெருமைக்காக, இனத்தின் உயர்வுக்காக, அவன் தரும் திட்டங்கள் கட்டாயம் எந்த வகையிலேனும் பயன்பட்டே தீரும். ஆணவமான அலங்காரப்பேச்சுக்களில் இறங்கமாட்டான்; கருத்தைச் சுருக்கமாக எடுத்துத் தருவான். தோழர்கள் சிந்தித்து, ஏற்று, அதன் வழி நடப்பர். தொண்டன் வெள்ளிக் கிண்ணத்திற்குப் பதில் மண்சட்டியைத் தந்தாலும் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதனால் எந்த உழைப்பும் பேச்சும், காற்றோடு போவனவல்ல!

இத்த உண்மையை மறுமுறையும் குன்றேறி நின்று கூறும் காட்சி தான், 22-8-59 அன்று சென்னையில் கூடும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு!

திராவிடர் முன்னேற்றத்திற்கு மாணவரணி செய்துள்ள தொண்டுகள் பலப்பல! தி. மு. கழகத்தின் வழியில் நடைபோடும் இம்மாணவர் படை, எந்த அரசியல் புயலிலும் சிக்காது சொந்த நிலத்திற்கு உழைத்திருக்கிறது; உழைக்கிறது; உழைக்கும்! வரலாற்றுத் தொகுப்பிலே, வீரச்சுவடிகள் பலவற்றைச் சேர்த்த பெருமை மாணவர் படைக்குண்டு. நாவலர், சொல்லின் செல்வர், பேராசிரியர் முதலிய பலரைத் தாய்க் கழகத்திற்குத் தந்த "நாற்றங்கால்", மாணவர் கழகம்! தியாகத் தழும்பை ஏற்றுக்கொண்டு சிரிக்கும் தென்னகத்து மறவர் மதியழகன் நடத்தித் தந்தது, இம்மாணவர் கழகம். 1955-ல் சென்னையில் மாநிலமாநாடு கூட்டி அவர் தன் பொறுப்புகளை அமைப்பாளர் பொன்னுவேலு அவர்களிடம் தந்து சென்று, ஆண்டுகள் நான்காகிவிட்டன. அதற்கிடையில் நடந்துவந்த பாதை பல புதிய பரிசுகளைத் தந்திருக்கிறது. அந்த வளர்ச்சியைக் கணித்துக் காட்டுவதுதான்—பொன்னுவேலு அவர்களின் பெருமையைக் கூறுவதுதான்—1959-ல் கூடும் இந்த மாநாடு.

அரசியல் இலாபவேட்டைக்காரர்கள் துணைக்கண்டமெங்கிலும் மாணவரணியைத் தம் பக்கம் திருப்பிக்கொண்டு வெற்றிபெற நினைக்கும், காலம் இது; அண்மையில் மலேஞாலத்தில் காங்கிரசார் தம் வெறிச் செயலுக்குப் பயன்படுத்திக்கொண்டதை நாமறிவோம். அதே முறையில் மேலும் செல்ல, அவர்கள் மாணவர் காங்கிரசையும், மற்றோர் இயக்கத்தார் மாணவர் சம்மேளனத்தையும் கட்டி வளர்க்கும் இழி தகைமையை அறிவோம். ஆனால் தி. மு. கழகமோ என்றும் அவ்வழிச் சென்றதில்லை என்பதை பறையறைவதே இம்மாநாட்டின் நோக்கம்!

இந்திப் பகை நம்மைக் கொத்திக் கிழிக்கத் துடித்திடும் காலம், இது. "ஆயிரம் இன்னல் வரினும் அயராது எதிர்ப்போம், இந்தியினை!" என அன்றும் இன்றும் மார்தட்டுவது, மாணவர் கழகம் இன்று நுழையும் இந்தி வெறியை எப்படியும் அழிப்பதுதான், மாணவர் மாநாட்டின் தலையாய நோக்கம்!

இத்துணைச் சிறப்புக்களுடன் நடக்கவிருக்கும் மாநாட்டிற்கு மாநிலமெங்கிலுமிருந்து மாணவர் படை வருகிறது. 120-க்கு மேற்பட்ட கிளைகளின் சார்பாளர்களும், 26-க்கு மேற்பட்ட அமைப்புக்குழு உறுப்பினர்களும் வருகின்றனர். திறமும் நெஞ்சுரமும் கொண்டு, திட்டமிட்டுப் பணியாற்றும் திருவள்ளூர்த் தோழர் பொன்னுவேலு, வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்து வரலாறு ஒன்றைப் புதிதாக வரைகிறார். "தென்பாண்டி வீரன்" நெடுமாறனும், தெளிந்த நெஞ்சும் கனிந்த உணர்வும் உடைய தோழர் இராமானுசமும் பிறரும் வரவேற்புக்குழுவின் செயல்களைக் கவனித்து வருகின்றனர்.

பச்சையப்பன் கல்லூரி தந்த ஒளி மணியும், மும்முனைப் போராட்டத்தினால் கன்னனூர்ச் சிறைவாசத்தை மூன்று மாதம் பெற்றவரும், கோவையில் காங்கிரசிற்கு அழிவு காட்டியவரும், தற்போது கோவை நகராட்சி மன்றத்தின் துணைத் தலைவராக வீற்றிருப்பவருமான, சட்டக் கல்லூரி மாணவர் தோழர் **ஆறுமுகம்** பி. ஏ. மாநாட்டுத் தலைமையேற்கிறார், நமக்கெல்லாம் வழி காட்ட!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றில் பல புதிய ஏடுகளைத் திறந்து வைத்த பெருமைக்குரியவர் தோழர் எஸ். டி. சோமசுந்தரம். "அண்ணாமலை"யில் அண்ணா அவர்களின் "ஹோம்லண்டு"க்கு பத்தாயிரம் ரூபாய்க்குமேல் திரட்டித் தந்த மாணவர் படையின் முதல்வர், இவர். அமைதியாக ம. கழகத்திற்கு வலிவு சேர்க்கும் செயல் வீரர் இவர்; அலங்கார வர்ணனைகளைவிட, செய்திக்கே முதன்மை கொடுத்துப் பேசும் இயல்பு உள்ளவர்.

அத்தோடு 30-க்கு மேற்பட்ட மாணவப் பேச்சாளர்களும் கூடித் தமது கருத்துரையைத் தரவிருக்கின்றனர். அனைவரும் தவறாது வந்திருந்து பயன்பெற வேண்டிய மாநாடு இது என்கிறார், தோழர் பொன்னுவேல் அவர்கள்.

ஆம்! புத்துணர்வும் புதுமை வேட்கையும் நித்தம் பரப்பும் மாணவர் படையே! இது, உனக்கொரு நன்னாள்! கொதிக்கும் இரத்தமும் கொப்பளிக்கும் சினமும் கொண்டோர், அணிவகுத்து, படை சரிபார்த்து, விரைந்தார்ப்பரித்துப் புறப்படும் திருநாள் இது!

"வாழ்விலையேல் மாண்பிலையே! வருத்தும் கறை துடைக்க, பலி என் தலையே!" எனப் போர் முழங்கும் பொன்னாள் இது!

மாணவரே! நாட்டின் விழி ஆனவரே! கடமையாற்ற வாரீர்! இழிவு நிலைமை மாற்றச் சேரீர்!

★

கிளைக் கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்!

வெளியூர்க் கூட்டங்களிலேயோ, அலுவலகமல்லாத பிற இடங்களிலேயோ, என்னைச் சந்தித்துக் கூட்டத்திற்குத் தேதி வாங்கிக்கொண்ட தோழர்கள், தயவு செய்து அலுவலக முகவரிக்குக் கடிதமெழுதி, உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, விளம்பரம் செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் திங்களிலும் செப்டம்பரிலும் 20-க்கு மேற்பட்ட கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், நாள் கேட்டிருக்கும் நண்பர்கள் தயவு செய்து அக்டோபருக்குப் பிறகு எழுதவும்.

அன்பன்,
கண்ணதாசன்.

முகவரி :
142, முதல் மெயின்ரோடு,
சி. ஐ. டி. காலனி,
சென்னை—4.

இது வேங்கடக் கழகம்!

"காப்பி"யடிக்கும் காப்பியச் செல்வர்கள்! காலத்திற்கொரு "கூடுபாயும்" சித்தர்கள்! கலைப்பண்பும் குலைய, அரசியலும் புரண்டதே! "ரெடிமேட்" பேச்சாளர்கள் வேண்டுமா? அணுகுக குமரித் தலைவர் சிவஞானத்தை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய வளர்ச்சியினைக் காண்பவர்கள் உள்ளத்திலே கள்ளமில்லாதவர்கள் என்றால் வரவேற்கிறார்கள். வஞ்சகத்திலே வளர்ந்தவர்கள், வாழ்கிறவர்கள் என்றால் வசை பாடுகிறார்கள். இந்த இரண்டு ரகத்தவரையும், கழகத்தவர் நிச்சயமாகச் சந்திக்கிறோம். முன்னவர்களின் பட்டியல் மிக நீண்டது. துணைக் கண்டத்தின் எந்த மூலையை எடுத்து வைத்துக் கொண்டு விவாதித்தாலும் சிறந்த சான்றுகளைக் காணலாம். பின்னவர்களின் பட்டியலிலே முதலிடம் பெறுகிறது, தமிழரசுக் கழகம் என்ற சினிமா விளம்பரக் கம்பெனியும், அதிலே ஒட்டியிருக்கும் தலைவர்களும்! இந்தக் குட்டித் தலைவர்களின் தலைவர், வீரர், விவேகி, சிவஞானக் கிராமணி! தொண்டர்கள், தலைவர்கள், தளபதிகள் அனைவருக்கும் இவரே ஆசான்! இவருடைய அரசியல் ஆசைகள் எல்லாம் தமிழரசுக் கழகத்தின் இலட்சியங்கள் ஆயின. விருப்பு, வெறுப்புகள் எல்லாம் போராட்ட முறைகளாயின. தனக்குப் பின்னேயிருக்கும் கட்சியின, எத்தனையோ கட்சிகளுக்கு இரவலாக்கிவிடும் இணையற்ற தலைவர் சிவஞான கிராமணி ஒருவர்தான்! "தமிழரசுக் கழகத்தின் ஆதரவு இருந்தால்தான் தமிழகத்தில் எந்த ஒரு கிளர்ச்சியும் வெற்றி பெறும்; அதனாலே அதன் தயவு வேண்டும்!" என்று எண்ணுகின்ற அளவுக்குப் பலக் குறைவான அரசியல் கட்சிகள் இங்கே இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தவிர்த்த எல்லாக் கட்சிகளுடனும் தமிழரசுக் கழகத் தலைவரும், தீவிரத் தொண்டர்களும், திடீர்க் கலைஞர்களும் இரண்டறக் கலந்துவிட்டார்கள். பலமுறை 1959 ஆம் ஆண்டில் ம. பொ. சியாரின் கழகத்தை இந்தத் தயாகத்தின் தேசீய இயக்கம் என்றோ, வாழ்வளிக்கும் வழிகாட்டும் இயக்கம் என்றோ, இந்தத் திருநாட்டின் வாழ்வும் தாழ்வும் ம. பொ சியின் தலைமையிலே தான் இருக்கிறது என்றோ அரசியலிலே குறைந்த அறிவுகொண்டோர் மட்டுமல்ல, தமிழரசுக்கழகத்தவரும், அவர்களின் பேரறிஞர் சிவஞானம் அவர்களும்கூட சொல்லிவிடமுடியாது! இவர்களுடைய கடந்த கால வரலாறு என்ன? 1946-ல் சிவஞானம், இராசகோபாலாச்சாரியாரின் பிரதம சீடன்; குல்லுகபட்டருக்கேற்ற குறுகிய ஆசைகள் நிரம்பிய உருவம்! திருப்பரங்குன்றம் தமிழ்நாடு அரசியல் மாநாட்டில், காமராசருடைய கையாளாக இருக்க லாயக்கற்றவர் என்று ஒதுக்கித் தள்ளப்பட்டவர். அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட இராசகோபாலாச்சாரியின் படை வீரர்களில் முதலிடம் பெற்றவரும் இவர்தான்! 1947-ல் கோவை அரசியல் மாநாட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு காமராசருடன் போட்டியிடத் துணிவு வந்தது. ஆனால் இந்த ஏழை பங்காளரை-சிலப்புச் செல்வரை-நிரந்தரமான அச்சுத் தொழிலாளியை, உண்மையான காங்கிரஸ்காரர்கள் உதறித் தள்ளிவிட்டார்கள். "நீங்கள் தலைவராக்காவிட்டால் நான் தலைவராக முடியாதா?" என்ற முறையில் தமிழரசுக் கழகத்தினைத் தன் நலன் கருதித் துவக்கியதும், அதற்குத் தானே தலைவன், தலைவன் என்று புறப்பட்டார்! ஊருக்கு ஊர் சென்று, தன்னைப்பற்றியே முழக்கினார்!

திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகாத காலத்தில் திராவிடர் கழகத்தின் செயல் முறைகள் சர்க்காரை மிரட்டிக்கொண்டிருந்த நேரத்தில், தமிழகத்துப் பொதுமக்களிடத்திலே தன்னைப் பற்றிய பெருமைகளைச் சொன்ன சிவஞானம் திராவிடர் கழகத்தின் அரசியல் கொள்கைகளை எதிர்த்தாலும் சமுதாயக் கொள்கைகளை, மொழிப்பற்றினையெல்லாம் பாராட்டினார். தான் துவக்கிய மாத இதழான 'தமிழ் முரசி'ல் கருத்துக்களைத் தெரிவித்தார். அறிஞர் அண்ணா அவர்களின் 'சரித்திர மறுப்பும் சட்ட மறுப்பும்' போன்ற சிறந்த கட்டுரைகளின் கருப்பொருளையெல்லாம் தைரியமாகத் தன்னுடைய எழுத்துக்களிலே இழைத்தும் இணைத்தும் கொடுத்தார்! அவருடைய திடீர்ச் சீடர்களுக்கு இந்த உண்மைகள் அப்போதெல்லாம் புரிவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் அண்ணாவின் எழுத்துக்களைத் தொடர்ந்து கற்ற என் போன்றார்க்கு, தொண்டர்களை ஏமாற்றிய இந்தப் புதுத் தலைவரின் திருட்டுத்தன்மைகள் தெளிவாகப் புரியத்தான் செய்தன. தமிழ், தமிழ் இனம், தமிழ்க் கலாச்சாரம், வடவேங்கடம், திருத்தணி, சிலப்பதிகாரம் இதுபோன்ற சில சொற்களை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டு மக்களையெல்லாம் ஏமாற்றிவிடலாம் என்று எண்ணிய சிவஞானத்திற்குச்சரியான அடி கிடைத்தது. 1948-ம் ஆண்டில் ஓ. பி. இராமசாமியார் சென்னை முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவினாசிலிங்கம் என்ற அமைச்சர் இந்தியைக்கட்டாயமாக்கினார். தமிழ்க் கடல் மறைமலையடிகளும், தமிழ்த் தென்றல் திரு. வி. க. வும், தமிழர் பெரும்படைக்குத் தூது அனுப்ப, பெரியாரும் அண்ணாவும் முன்னின்று "வாரீர்! வாரீர்!" என அழைத்தனர், தமிழர்களை! இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டியவர்கள் 'தமிழர் தலைவன்' எனத் தன்னைத்தானே பெருமைப்படுத்திக்கொண்ட சிவஞானத்தை நினைக்கவில்லை. இப்படியொரு மாவீரன் சென்னையில் இருப்பதாகவே கருதவில்லை! தான் தமிழ்நாட்டு அரசியலில் ஒரு செல்லாக்காசு என்பதை நன்கு உணர்ந்துவிட்ட "கலியுகத்துக் கம்பன்" ஓடினார், சென்னை 'செயிண்ட்மேரீஸ்' மண்டபத்திற்கு. "வழிவிடுங்கள்; வழிவிடுங்கள்" என்று கூறிக்கொண்டே மேடையேறினார்! "சிவஞானம் இந்தி எதிர்ப்பிலே சிறை செல்வான். சிறையிலேயிருந்து எலும்புக்கூடாக ஒரு உருவம் வெளியே வருமானால் அது இந்தச் சிவஞானத்தின் உடலாகத்தான் இருக்கும். நண்பர் அண்ணாத்துரை அழைக்காவிட்டாலும், அழையா வீட்டுக்கு நுழையா விருந்தாளி என்ற முறையைக்கூட மறந்துவிட்டு மாநாட்டுக்கு வந்துள்ளேன்" என்று பேசினார். காங்கிரஸ் கூடாரத்திலேயிருந்து, கதர்ச்சட்டைக் கழற்றியறியாத ஒருவரிடமிருந்து இத்தகைய சொற்கள் வெளிவந்தது பலருக்கு வியப்பூட்டின. சிவஞானம் என்ற கன்னித்தமிழனை—மொழிகாக்க முற்பட்ட கட்டபொம்மனைத் தமிழர்கள் பலர் பாராட்டினார்கள். இவரும் காங்கிரஸ்காரர்களை எதிர்த்துக் கடுமொழிகளை, கண்டன உரைகளாக்கித் தாக்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் சாகச வீரர்களுக்குப் புகலிடமளிக்கும் மூகாமல்ல என்பதனைத்துணைப் பெரிதாக மதித்துக் காத்து வருகிறோமே அதே முறையில்தான் அன்றைய தினமும் அண்ணா அவர்களுக்கு எண்ணம் இருந்தது. எனவேதான் ஓடி வந்த சிவஞானத்திற்கும் ஏனைய சந்தர்ப்ப வாதிகளுக்கும் புரியும் வகையிலே சொன்னார்: "நீங்கள் எல்லாம் திராவிடர் கழகத்தின் போராட்டத்திலே கலந்து கொள்ள வேண்டாம். தனியாகவே இந்தியை எதிர்த்துப் போராடுங்கள். எங்களுடைய வேகமான முயற்சிகள் உங்களுக்கு ஒத்துவராது எனவே புதியதொரு போர்க்களம் காணுங்கள்." இந்த முறையிலே கருத்துக்களைத் தெரிவித்து, இதனை எதிர்பாராத சிவஞானங்களின் சிந்தனையிலே சிக்கலையும் உருவாக்கி அவரது எதிர்காலம்பற்றிய இன்பக் கனவுகளைக் கலைத்துவிட்டார்! சிவஞானம் விருப்பியது—எதிர்நோக்கியது—கழகத்தின் ஆதரவிலே நடைபெறும் இந்தி எதிர்ப்பு இயக்கத்திலே இடம்பெற்றால், தன்னைத் தமிழ் மக்களிடத்திலே உயர்த்திக் காட்டிவிடலாம் என்பதுதான்! இந்தச் சதி நோக்கினை நன்றாக உணர்ந்துவிட்டால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் இன்னொருவர் தியாகத்திலே புகழேணியில் ஏறத் துடித்த சிலப்பதிகாரக் காப்பியத் தலைவருக்கு "புதிய பாதையில் புறப்பட்டுச்செல்லுங்கள்" எனக் கட்டளையிட்டார்! சிவஞானத்தின் எதிர்காலம் இருண்ட குகையாகிவிட்டது. காங்கிரஸ் கட்சியில் இவரை இவருடைய செயல்கள் நம்பிக்கைத் துரோகியாக்கிவிட்டன. கட்சியினை விட்டு வெளியேறும்படி நல்ல காங்கிரஸ்காரர்கள் வெளிப்படையாகவே பேசினார்கள். ஆனால் ம. பொ. சியாரோ வெட்கத்தை ஒளித்து வைத்துக்கொண்டு "தாய்ச் சபையான காங்கிரஸ் கட்சியை விட்டு விலகமாட்டேன்" எனப் பேசினார்! 'காண்டீபம்' என்ற கணை தொடுத்த மாரிசாமியைப் போன்றவர்கள் இவரையும் இவரது சீடர்களையும் அரசியல் ஓணான்களாக்கி "வேலி தாண்டி ஓடுவீர்!" எனக் கேலிச் சித்திரமும் வரைந்து காட்டினார்! அவர்கள் நல்ல காரணத்துடன் சிவஞானத்தைக் கண்டித்தார்கள்! சிவஞானம் பழைய காங்கிரஸ் பாணியை மறந்துவிட்டு, கழகத்தின் முறைகளைக் காப்பியடித்துக் காரியங்களைச் செய்தார். கழகம், மாநிலம், மாவட்டம், பொதுச் செயலாளர், தலைவர், தளபதி, கவிஞர், கலைஞர், ஐயா, அண்ணா என்பன போன்ற அடைமொழிகளையெல்லாம் "காண்பவர் கேலி செய்வார்களே" என்றும் எண்ணிப் பாராமல் இணைத்துக் கொண்டார். பெரியார் அவர்களை அன்று தலைவர் என்றோம். சிவஞானமும் தன்னைத் தலைவராக அறிமுகம் செய்தார். கழகத்தின் சொத்தாக மட்டும் இருந்த அண்ணாவை நாம் தளபதி என்றோம். பின்பு அறிவுலகம் அவர் சொல்லுக்குத் தலையசைத்ததால் அறிஞர் ஆனார்! தமிழரசுக் கழகத் தலைவரும் தொண்டர்களும் விநாயகம் என்பவரைத் தளபதியெனப் பேசி எல்லைப் போராட்ட வீரர் என்றார்கள்! அந்தத் தளபதி ஓடிப்போன கதையை அறிவோம்! கவிஞர் செரீபாம்! கலைஞர் நாகராசனும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பற்றிய மிக மிகக் குறைந்த அறிவு இருந்ததனால்தான், தலைவரைச் சில நேரங்களில் 'ஐயா' வாக்கி காஞ்சிமூனா செரிபை'அண்ணா' வாக்கினார்கள்! தளபதி விநாயகம் 1952 தேர்தலில் திராவிடநாட்டுப் பிரிவினைக்குப் போராடுவேன் என்று சொல்லி நம் ஆதரவினைப் பெற்றவர். பின்பு திருத்தணிக்கு ஓடினார். சட்டசபையை விரும்பாத தலைவரும் தமிழரசுக் கழகமும் விநாயகத்தைத் தான் விருதுபெற்ற வீரர் என்றனர்! 1957 தேர்தல் வந்தது; விநாயகம் புதுக் காங்கிரஸ்காரராகி விட்டார். சிவஞானத்திற்குக் கிடைக்காத 'டிக்கெட்' அவருக்குத் தேடிவந்தது! தளபதியை இழந்த வீரர்களின் தலைவர் இதனைப் பற்றி எதுவுமே பேசவில்லை! திராவிட இயக்கத்தை எதிர்ப்பதே தன்னுடைய இலட்சியம் என்று வெளிப்படையாகத் தெரிவித்தார், ஒரே தலைவரும் நிரந்தரத் தலைவருமான சிவஞானம்! காங்கிரஸ்காரர்கள் காமராசர்கள் உட்பட அத்தனைப் பேர்களும் சிவஞானம் செய்துவிட்ட சில்லறைத் தவறுகளையெல்லாம் மறந்தனர். மன்னித்தும் விட்டனர். மாவட்ட ரீதியில் எதிர்ப்பு மாநாடுகள் நடத்தினர். "திராவிட இயக்கமே! வேங்கடத்திற்கு வெளியே போ" என எங்குச் சென்றாலும் குரல் வலிக்கப் பேசினர். இவருக்குத் துணையாக நின்றார் செங்கல்வராயன்! 1952 பொதுத்தேர்தலில் தமிழரசுக் கழகத்தவர் தம்முடைய சொந்தப் பேச்சுக்களையெல்லாம் மறந்துவிட்டு—ஒதுக்கி வைத்துவிட்டு எதிர்க்கட்சிகளைத் தாக்கப் புறப்பட்டனர்! அரசியல் பேசத் தெரியாத காரணத்தால் அந்தப்புர ஆராய்ச்சிகளைத் தேடியெடுத்துப் பேசினார்கள். ஆள் உயரம்—எடை—இவைகளையெல்லாம் பேசித் தங்களது சிறப்புச் சொற்பொழிவுகளை முடித்துக்கொண்டார்கள்! தமிழரசுக் கழகம் கம்யூனிஸ்ட்களைக் கொலைக்காரர்களாக்கி, ஜீவானந்தங்களையும் ராமமூர்த்திகளையும் கேலியாக விமர்சனம் செய்த மேடைகளுக்கு அளவேயில்லை! நம்மால் மறக்க முடியவில்லை. கம்யூனிஸ்ட்களும் மறந்திருக்கமாட்டார்கள். ஆனால் தேர்தலில் இவர்கள்

— 9-ம் பக்கம் —

தொல்காப்பியச்சுவை!

10. உவமச் சிறப்பு.

தொல்காப்பியரது விரிவான நூலில் சில பகுதிகளைச் சுருக்கிச் சொல்ல முனைவது ஓர் அறியாமையையே காட்டும். முன்னரே உவமத்தின் இயல்பைப்பற்றிப் பொதுவாக அறிந்த நாம் இன்று உவமச் சிறப்பைப் பற்றிச் சில எடுத்துக் காட்டுக்களுடன் அறிந்தாற்ருன் ஓரளவு முதுபெரும் புலவரான தொல்காப்பியரது உள்ளத்தை உணரமுடியும்.

உவமைகள் நான்கு இடங்களிலிருந்து தோன்றும் என்பது விதியாக முன் இதழிலேயே கூறப்பட்டது. எவ்வாறு ?

"முரசு முழங்கு தானை
மூவரும் கூடி
அரசவை இருந்த
தோற்றம் போல"

என்ற புறநானூற்றுப் பாடல் நமக்கு மூவேந்தரும் ஒன்று கூடி இருந்த செய்தியைக் கூறுகிறது. காணப் பெறுவோர் மூவரும் மூன்று பெரும் வேந்தர்கள் - ஒன்று சேருதல் இல்லை - "அவர்கள் ஒன்ருக இருந்ததைப் பார்த்தால் எப்படிச் சிறப்பாக இருக்கும் ?" என்பதைக் குறிக்கும் **இவ்உவமை பயன் பற்றிச் சிறப்பு நிலைக்களனுக வந்துள்ளது.**

இரண்டு நண்பர்கள். இமையும் அதன் விழியும் போன்ருேர். கல்லூரியில் மாணவனுய் இருந்தபோதும், எழுநூறு கற்களைத் தாண்டிச் சென்று வேறு துறையிலே படிக்கும் போதும் உள்ளம் இரண்டும் ஒரிடத்திலே கூடும் இயல்பினர். உடல் நலம் இல்லை ஒருவருக்கு என்றவுடன் தன் கண்களிலே நீர் மல்க, கருத்தோடு வேண்டுவன கொண்டுதரும் பண்பு பொங்க, அழகிய இனிய சொற்கள் அமிழ்தான வாய் கூறும் மற்றவர்; சிறந்த நண்பர் ஆவார்கள். அத்தகைய நண்பரை என்ன உவமை கொண்டு சிறப்பிக்க முடியும் ? சிந்தித்தால் தொல்காப்பியர் முடிவே சால்புடைத்து என்பது தெளிவு.

"கண்போல்வான் ஒருவனுளன்"

—என்பது காதல்பற்றி உருவாகிய நிலைக்களத்திலிருந்து தோன்றியது.

நலம் பாராட்டும் செய்தியை நாம் இன்று பல துறைகளில் காணலாம். ஆனல் நலம் புனைதல்கொண்டு மகளிரைப் பாராட்டும் நிலையையும் காணுதல் வேண்டும். இயற்கையிலேயே இரு விழிகள் ஈராயிரம் இளம் உள்ளங்களைத் திருகிச் செல்லும் பெற்றியன. என்ருலும் அக்கரிய விழிகள் கண்ணுள்தானே இருக்கின்றன என்று அதற்குக் காவலாகக் கண்ணுக்கு வெளியில் (புருவத்தில்) கரியமை தீட்டும் காரிகையர் நலம் கண்டால் என்ன கூறுவது ? 'கார் குழலை வளர்த்து அதிலே காளையர் தம் உயிர்களைக் பூவாக எடுத்துச் செருகும்'கன்னியர் தங்கள் பின்னலை இரண்டாய்ப் பின்னியதைக் கண்டால் என்ன உவமை கூறுவது ? **வாணிதாசன் கூறுவது:**

"பெட்டியிலே சுருண்டகரும்
பாம்பைப் போலப்
பின்னிவிட்ட சடையவளுக்
கிருக்கு மென்றும்"

பாம்பும் உயிர் பெறுவது போலப் பாவையரும் தங்கள் குழலினைக் கொண்டு உயிர் எடுப்பர் என்பது என்ன அழகான உவமை! **இது நலப்பற்றி உருவினை நிலைக்களனுகக்கொண்டு தோன்றியது.**

வீரம் வேண்டாமா? என்று நம் இளைஞர் பெரும்படை கேட்குமே! தொல்காப்பியா எதை மறந்தாலும் இதனை மறப்பாரா ? ஓர் இளம் பெண், ஒருமுதியவளை நோக்கி"உன் மகன் எங்கே ?" என்று கேட்கிருள். அதற்கு அம்மூதாட்டியார், 'என் புலி பிறந்த குகை இது தான்' என்று தன் வயிற்றினைக் காட்டி, இப்பொழுது அவன் இருக்கவேண்டிய இடத்தில் (போர்க்களத்தில்) இருக்கிருன்' என்று புறநானூற்றில் ஒரு செய்தி வருகிறது. இதற்கேற்ற உவமை இதுதான். **இது வலிபற்றி வினையை நிலைக்களனுகக் கொண்டு வந்த உவமையாகும்.**

உவமைகளிற் சற்று ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டியவை இரண்டேயாகும். ஒன்று உள்ளுறை; இறைச்சி என்பது இரண்டாவது.

உள்ளுறை என்ருல் கூறப்பட்ட செய்தியின் உள்ளே வேறு உண்மை புதைந்துள்ளது என்பதே. அறிவாற்றல் உடையவர்கள் மட்டுமே அந்தப் புதைபொருளை, உண்மையை உணரமுடியும். இதனை எச்சம் என்றும் கூறுவார்கள். இவ்வுவமை தமது நோக்கால் இரண்டு வகைப் படுவன.

1. வெறுஞ் சொற்களிடையே உள்ளே அமைந்த உண்மையை வெளிப்படுத்தாமல் அகத்தே அடக்கி நிற்றல். இதனைச் "சொல்லொடு முடிவுகொளியற்கை புல்லிய கிளவி" என்கிருர்.

2. ஒலி, கூறும் முறைமையைக் கொண்டு அடையாளம், பிற குறிப்பால் வேருெரு பொருளை உய்த்து உணரவைக்கும் கூற்றை, "குறிப்பால் முடிவு கொளியற்கை புல்லிய கிளவி" என்றும் செய்யுளியலில் விளக்குகிருர்.

தலைவியைத் தலைவன் களவிற் கண்டு இன்பம் பெற்று வருகின்ருன். தலைவியும்—தலைவன் தரும் இன்பத்தை விருப்பி மணம்பற்றிய நினைவை மறந்து விட்டாள் இவ்வேளையில் தோழி தலைவனிடம் கூறுவாள். "ஐயா, நீர் வாழும் நாடு எப்படிப்பட்டது தெரியுமா ? வண்டினங்கள் வதியும் மலர்க்காக்கள் மலிந்தது. பொன்நிற வண்டு ஒன்று ஆங்கே மலர்ந்து விளங்கும் மல்லிகையில் தேன் குடித்து, வேங்கை மலரிலே விரும்பிய தேனை உண்டு, கொழுவிய தாமரையில் தேனைக் குடித்தவாறே மயங்கித் தன் நிலை இழந்து அயர்ந்து கிடக்கும் பெற்றியது" என்கிருள். இது எதனைக் காட்டுகிறது ? வண்டு தேனை வேண்டியதற்கு மேலும் குடித்த நிலையை மட்டும் காட்டவில்லை! "தலைவனே! நீ தலைவியிடம் இன்பத்தை வேண்டியதற்கு மேலேயே பெற்று 'மணம்' செய்ய வேண்டும் என்பதை மறந்து, மயங்கி இருக்கிருய்!!" என்பதையும் உள்ளுறை பொருளாகக் காட்டுகின்றதன்ருே.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட குறிப்பொடு முடிவு கொளியற்கை உள்ளுறையைக் காண்போம்.

இங்கும் தலைவன்-தலைவியர் இடைவிடாது களவுப் புணர்ச்சியில் இரவுக் குறியிலும் ஈடுபடுகின்ற செய்தியைக் கொண்டு விளக்கலாம். இதனை அறிந்த தோழி, தலைவனிடம் "நீ வரும் காட்டு வழியில் கொடிய விலங்குகள் இரவில் உண்டே. அதனல் நீ துன்பமுற்ருல் தலைவி துயருறுவாள்" என்று கூறிய பான்மையிலே தலைவியைப் பகலிலே வந்து பலரறிய மணம் முடித்துச் செல்வாய் என்ற குறிப்புக் கிடைக்கின்றது.

"கருங்கால் வேங்கை
வீயுறு துறுகல்
இரும்புலிக் குருளையிற்
ருேன்றுங் காட்டிடை
எல்லி வருநர்
களவிற்கு
நல்லை யல்லை
நெடுவெண் ணிலவே"

என்ற குறுந்தொகையின் 47-ம் பாடல் விருந்தாய் அமைவது சிறப்பாகும்.

அடுத்து "இறைச்சி" என்பதையும் கண்டுவிட்டால் ஒருவாறு உவமையின் சிறப்பைப் புரிந்துகொள்ள முடியும்.

இறைச்சி என்பது உரிப்பொருளின் சிறப்பை விளக்குவதற்கு வருவதாகும். சொல்வது ஒன்ருய் இருக்க, அதனுள்ளே வேறு பொருள் கருத்தாகக் கொண்டு புதைந்திருப்பதே இறைச்சி எனப்படும். 'இறைச்சி தானே பொருட்புறத்ததுவே" என்ற பொருளியற் சூத்திரம் சான்ருகும்.

நற்றிணையில் ஒரு பாடல்.

'கொழுஞ்சுளைப் பலாவின்
பயம்கெழு கவாஅன்,
செழுங்கோள் வாங்கிய
மாச்சினைக் கொக்கினம்
மீன்குடை நாற்றம்
தாங்கல் செல்லாது,
துய்த்தலை மந்தி
தும்மும் நாட!"

(—நற்-326.)

"ஒரு பலாமரத்திலே குரங்கும் வாழுகிறது. கொக்கும் வாழுகிறது. கொக்கு மிகவும் வருந்திப் பெற்ற மீனைக் கொண்டுவந்து உண்ண முயல்கிறது. அந்த மீனே பல நாட்களுக்குமுன் இறந்ததுபோலும். ஒரே நாற்றம். மரமோ பலா; குடை நாற்றம் எடுக்கிறது குரங்கிற்கு! குரங்கோ மாமிசம் உண்ணு விலங்கு. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தது; முடியவில்லை! நாற்றத்தைத் தாங்கமுடியாது தும்மிவிட்டது!" என்கிருர் புலவர்

இச்செய்தியின் உள்ளே பொதிந்து உள்ள உண்மையே உள்ளுறை ஆகும். இது தோழி தலைவனிடம் கூறியது. "அப்பா தலைவா! நீயும் - தலைவியும் சந்திக்கும் உண்மை ஊராருக்கு (குரங்குக்கு)த் தெரிந்து விட்டது அவர்கள் முதலில் அம்பலாய்க் கூறி இப்பொழுது அலராகத் தூற்றுகிருர்கள். அதனல் இச்செயலை இனிப் பொறுக்கமுடியாது! தலைவியை விரைந்து மணங்கொள்வாய்!" என்ற இறைச்சிப் பொருள் இனிது தோன்றுகின்றது.

உள்ளுறை உவமம் கருப்பொருள் பற்றியே வரும்.

இறைச்சியும் உள்ளுறை உவமமும் அகத்துறைகளுக்கே சிறப்புரிமை கொண்டு வழங்கும் என்பதையும்நினைவிற்கொள்ளவேண்டும்.

உள்ளுறை, இறைச்சி போன்றவைகளை, உளவியல்பு அறிந்தோரும், இலக்கியப் புலமை உடையோரும் எளிதில் உய்த்துணர்வர். எஞ்சியோர் அவர்கள் எடுத்துக்காட்ட உரை மூலம் உணர்ந்து இன்பம் பெறுவர்.

-இராம. இராமநாதன்
பி. ஏ. (ஆனர்சு)

(தொடரும்)

தி. மு. க. பதினேராம் ஆண்டுத் தொடக்கவிழா நாளாகிய 17-9-'59-ல் வெளிவருகிறது!

சூடான அரசியல் கருத்துக்கள் !
சுவைமிக்க கற்பனைகள் !!
அன்ருட அரசியலின் ஆராய்ச்சி அரங்கு !!!

தி. மு. க. அணிவகுப்பில் முரசுகொட்டும் பொன்னேடு !

தாய் நாடு
ஆசிரியர்: T.K.சீனிவாசன்

தி. மு. க. வார ஏடு.

ஆசிரியரின் தொடர்கதையும் முதல் இதழிலேயே இடம் பெறும்.

விலை : 16 காசு. ஆண்டுச் சந்தா ரூ. 8-00.

நிர்வாகி :

"தாய் நாடு" அலுவலகம்,
சென்னை-14.

"திரு"- தமிழ்ச் சொல்!

மாநகராட்சி மன்றத்தில் மானம் வென்றது! பூவிருக்கப் புல்லை முகர்வார் உண்டோ? "திரு"விருக்க "ஸ்ரீ" போடுவதேனோ? சமயவாதிகளும் எதிர்க்கும் சதிவேலை!

சென்னை மாநகராட்சி மன்றத்தில் 11-8-59-ல் மாநகராட்சி மன்ற அறிவிப்புகள், அழைப்பிதழ்கள், முகவரிகள், மற்றும் எல்லாவித நடவடிக்கைககளிலும் 'ஸ்ரீ', 'ஸ்ரீமதி'க்குப் பதிலாக 'திரு', 'திருமதி' என்ற சொல்லைக் கையாள்வது என்ற தீர்மானம் நிறைவேற்றினார்கள். தொடர்ந்து தமிழ்ப்பணி ஆற்றுவதில் முனைந்து நிற்கும் 'தொடர்பன்'' எனும் புனை பெயர் படைத்த மா. சு. சம்பந்தம் தீர்மானத்தை முன்மொழிந்துள்ளார். திரு. வி. முனுசாமி வழிமொழிந்து அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 15-8-59-ல் பெரியார் ஈ. வே ரா அவர்களும் தன்னுடைய எண்ணங்களை நிறைவேற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாராட்டி உள்ளார். திராவிட முன்னேற்றக் கழகம் செய்த காரியத்தை மற்ற நகராட்சி மன்றங்கள் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் 7-3-42-ல், ஆட்சி நிலையக் கடிதங்களில், அலுவலாளர் பெயர்கட்கு முன் 'ஸ்ரீ' என்ற வட சொல்லுக்குப் பதில் "திரு" என்ற தமிழ்ச்சொல்லைப் பயன்படுத்துமாறும், அதுபற்றித் தமிழ் மக்களும் தமிழ்ச் சங்கங்களும் தங்கள் கருத்தை 15-4-42-க்குள் அரசாங்க பொது (அரசியல்) இலாக்காவிற்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையைக் கண்டு ஆங்காங்கே உள்ள கழகங்களும் பொது மக்களும் ஆயிரக் கணக்கில் ஸ்ரீ'க்குச் சீட்டுகொடுத்து அனுப்பிவிட்டு 'திரு'வைச் சேர்க்குமாறு வேண்டினர்.

அந்தச் சமயத்தில் சொல்லின் செல்வர் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் "இந்து" இதழில் ஓர் அழகிய கடிதம் எழுதி, 'ஸ்ரீ'' என்ற வடசொல்லை நீக்கக் கட்சி வேறுபாடு பாராட்டாமல் மொழி வழி நின்று பாடுபடுமாறு வேண்டிக்கொண்டார்.

திரு. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் "இந்து" இதழில் 1942-ல் குறிப்பிட்டதாவது:

"'திரு', 'ஸ்ரீ' ஆகிய இவற்றில் எது ஏற்புடைத்தாகுமென்பதைக் கருதுங்காலை, தொல் வழக்கு 'திரு'வின் சார்பாகவே இருப்பதைக் காணலாம். மிகப் பழம் பெருமை வாய்ந்த வைணவத் திருவூர்ப் பெயர்கள் **திருவரங்கம், திருவேங்கடம்** என்பன ஆகும். **திருவரங்கத்தைப்** பாடிய ஆழ்வார்கள் எல்லாரும் அதைத் **திருவரங்கம்** என்றே போற்றிப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆழ்வார்களில் முதன்மையானவரான நம்மாழ்வார் பிறந்த ஊர் **ஆழ்வார் திருநகரி** ஆகும். அவர் அருளிச் செய்த பாடல்கள் **திருவாய்மொழி** என்றே அழைக்கப்படுகின்றன. வைணவர்கள் நெற்றிக்கு இட்டுக்கொள்ளும் பொட்டு **திருமண்** ஆகும். திருமாலுக்கு உகந்த நட்சத்திரம் **திருவோணம்** ஆகும். இத்தகைய எடுத்துக் காட்டுக்கள் எண்ணிறந்தவையாகக் காட்டலாம். சைவ மரபும் அவ்வாறே **திரு** என்னும் அடைமொழியை பெரிதும்போற்றுகிறது. புகழ்பெற்ற சைவக் கோயில்கள் **திருச்சிற்றம்பலமும் திருவாலவாயும்** ஆகும். சைவர்கள் நெற்றியிலிடுவது **திருநீறு**. அவர்களது வழிபாட்டு நூல்கள் **திருமறைகள்**. சிவபிரானுக்கு உகந்த நட்சத்திரம் **திருவாதிரை**.

இப்பண்டைய மரபையொட்டி, தமிழகத்தில் வாழ்ந்த சமணர்கள் கூட, **திரு** என்பதையே அடைமொழியாகக் கொண்டார்கள். சமணர்கள் வழிபாட்டுக்குரிய கோயில்கள் **திருமலையும், திருநறுங்கொண்டையும்** ஆகும். தமிழகத்தின் ஊர்ப் பெயர்கள் மேற்போக்காகப் பார்த்தால்கூட "திரு" தங்கியிருத்தலைக் காணலாம். இலக்கியக் கண்கொண்டு மட்டுமே இத்துறையில் நாட்டம் செலுத்த வேண்டும். நல்ல முடிவைக் காண்பதற்கு வீண் கவுரவமும் கட்சி அரசியலும் தடையாக இருக்கக்கூடாது.

ரா. பி. சேதுப் பிள்ளை."

மேலும் இவ்வறிக்கை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தார் 1942-ல் "திரு" என்ற அடைமொழியை ஆட்சியில் கொண்டுவர முயன்றபோது வெளியானது. நமது அருமை அமைச்சர் பக்தவத்சலனார் "ஸ்ரீ" என்ற வடசொல்லை வரவேற்று உரைத்தபோது, நமது பேராசிரியர் மேற்படி அறிக்கையை "இந்து", "மெயில்", "இந்தியன் எக்ஸ்பிரஸ்" முதலிய இதழ்களில் வெளியிட்டுத் தமிழகத்தைத் தட்டி எழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1942 கடந்து இன்று 17 ஆண்டுகள் ஆகின்றன. இன்றையச் சூழ்நிலையும் மாறிவிட்டது. இன்று தமிழ் ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு உரிய ஆக்கவேலைகள் ஆங்காங்கே நடைபெற்று வருகிறது தமிழில் கலைச்சொற்கள் இல்லை என்ற குறை நீக்கப்பட்டு வருகிறது குறைகூறிய மக்கள் இன்று ஊமையராகி விட்டனர். சிற்சில சமயங்களில் தங்கட்குக் கிடைக்கும் காலத்தை நழுவ விடாமல் பயன்படுத்திக்கொண்டு கூச்சலிடலாம். அது கால வெள்ளத்தில் மறைந்துவிடும். அதற்குக் காரணம் நமது தமிழ்மொழி சில இலக்கண வரம்பிலா மொழிகள் போன்று இல்லாமல், எக்காலத்துக்கும் ஏற்ற கலைச்செல்வங்களையும் வேர்ச்சொற்களையும் (Root words) நிரம்பப் பெற்றுத் திகழும் மொழியாதும். சட்டக்கல்லூரியில் சில அறிஞர்கள் கூடிப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை தலைமையில் சட்டத் தொடர்பான கலைச்சொற்களுக்கு தமிழ்ச் சொற்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சில ஆசிரியர்கள் கூடி, அவர்கள் தமக்குத் தொடர்பான கலைச் சொற்களைத் தமிழில் ஆக்கித்தந்து இருக்கின்றனர். தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தில் திரு. ஈ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திராவிட மொழி நூலார் திரு ஞா. தேவநேயப் பாவாணர் போன்ற பலர் துணையைக்கொண்டு "ஆட்சி மொழிக் கலைச்சொல்" பட்டியல் ஒன்று உருவாக்கி அரசியலாரிடம் ஒப்படைத்து உள்ளார். இதற்கெல்லாம் அச்சாணியாய் செந்தமிழ்த் தொண்டர் திரு அவினாசிலிங்கனார் தலைமையில் நடைபெறும் "கலைக்களஞ்"சியத் தொகுதியினர் (இதுவரை 6 தொகுதிகள் வெளிவந்துள்ளன) விஞ்ஞானம், புவியியல், தாவரவியல், விலங்கியல், மருத்துவம், சட்டம், வாணிபம், வரலாறு, முதலிய தலைப்புகளில் வரும் பல்வேறு கட்டுரைகளில் கலைச்சொற்கள் பலவற்றை நல்ல தமிழில் ஆக்கிப் பயன்படுத்தி வருகின்றனர் மேலும் தங்களிடம் உள்ள 22,000-க்கு மேற்பட்ட கலைச்சொற்களைத் தொகுத்து வெளியிட முயற்சி செய்தும் வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

மேலும் இத்தகைய கலைச்சொற்களைப் பயன்படுத்தித்தான் தமிழ்ப் பாடப்புத்தகங்கள் இருத்தல் வேண்டும் என்ற கட்டளையும் இருப்பதால், அவ்வண்ணம் நல்ல தூய கலைச்சொற்களைக் கொண்ட பாடப் புத்தகங்கள் இளைஞர்கள் கையில் உலவி வருவதால், எதிர்காலம் தூய தமிழ் நடைக்கும்-தமிழில் கலைச்சொற்கள் வளத்திற்கும் வழி உண்டாக்கிவிடும். இதனை அறிந்துதான் வடமொழிப் பற்றுடையார் பலர் அண்மையில் கூடிய எழுத்தாளர் மாநாட்டில் தங்கள் கைவரிசைகள் இனிச் செல்லுபடியாகாது என்று வயிறெரிந்து புலமை உலகத்தைத் தூற்ற நினைத்தது. அந்த நினைப்பு ஆடிக்காற்றுக்கவே சென்றுவிட்டது.

மற்றொரு புறத்தில் கல்லூரிகளில் தமிழ்மொழியில் எல்லாப் பாடங்களையும் பயிற்றுவித்தல் வேண்டும் என்ற கொள்கை வற்புறுத்தப்பட்டு செயல் முறையில் ஆக்கம் பெறவும் இருக்கிறது.

இத்தகைய சிறப்புகளெல்லாம் எய்திவருகின்ற சமயத்தில்—மற்றொரு திருப்பு மையத்தில் வாளாய் இருத்தல்கூடாது. மலையாளத்தாரும் கன்னடத்தாரும் தெலுங்கரும் தனியாட்சி செலுத்தும் இச்சமயத்தில் எஞ்சி இருக்கும் சென்னையைச் சென்னை என்றே அழைத்துக்கொண்டிருத்தல் நகைப்புக்கு உரியதாய் இருக்கிறது. அரசியலார் தமிழ்மொழியை மட்டும் ஆட்சி மொழியாய் ஆக்கிவிட்டு அம்மொழி வாழும் நாட்டிற்கு மட்டும் **தமிழ்நாடு** என்று பெயரிடாது அஞ்சி இருப்பது தமிழகப் பண்புக்கு இழுக்கே ஆகும். மேலும் சென்னை அரசியலார் மாநகராட்சி மன்ற தீர்மானத்தைப் பின்பற்றித் தாங்கள் தங்கள் நடவடிக்கைகளில் "ஸ்ரீ" என்ற சொல்லுக்குப் பதில் "திரு" என்ற சொல்லை நடைமுறைக்குக் கொண்டுவர முற்பட வேண்டும். இதனை உடனடியாகச் செய்தல் நன்று.

மேலும் இந்தச் சமயத்தில்தான் நற்றமிழ்த் தொண்டர்கள் பலரும் கழகங்கள் மன்றங்கள் வாயிலாகப் பொறுப்புள்ள பல தொண்டுகள் செய்யவேண்டிய இன்றியமையாத கடமைகள் முன்னிற்கின்றன. தமிழர் பெயர்கள் எல்லாம் பிறமொழிப் பெயர்களாகவும், பொருள் விளக்கம் அல்லாத பெயர்களாகவும் வழங்கி வருகின்றன. பண்டையத் தமிழ் நூல்களில் வழங்கும் புலவர், புரவலர், மன்னர், பெயர்கள் எல்லாம் வழக்கிழந்து போய்விட்டன. இன்று வழங்கும் மக்கட் பெயர்களில் நூற்றுக்கு ஆறு ஏழுகூடத் தமிழ்ப் பெயர்களாக இல்லை. அதன் காரணங்களை முதற்கண் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

சங்க காலத்தில் புலவர், புரவலர் முதலியோர் பெயர்கள் எல்லாம் தூய தமிழாகவே இருந்தன. ஏறத்தாழ 10-ம் நூற்றுண்டிற்குப்பின் சங்க நூற் பயிற்சி தமிழகத்தில் குறைந்து வந்ததால் அக்காலம் முதல் தமிழ் மக்கள் சங்ககாலப் புலவர் முதலியோர் பெயர்களை இடாதுபோயினர். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் 1942-ம் ஆண்டு "ஸ்ரீ" போராட்ட அறிக்கையில் குறிப்பிட்டதுபோல், 7-ம் நூற்றுண்டு முதல் 9-ம் நூற்றுண்டு வரை தேவார காலத்தில் கோயில்கள் கொண்ட திருவூர்ப் பெயர்கள் எல்லாம் தூய தமிழாகவே இருந்தன. கோயில்களில் உள்ள இறைவன் திருப் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே இருந்தன. அவ்விதமே திருமால் கோயில் கொண்டுள்ள இடங்களிலும் தூய தமிழ்ப் பெயர்களாகவே இருந்தன. ஆனால் தேவார காலத்திற்கும் அருணகிரிநாதர் காலத்திற்கும் இடையில் வடமொழியாளர்கள் திருவூரின் பெயர்களையும் இறைவன் பெயர்களையும் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்து

"கல்கி" தரும் கருத்துரை:

திருமதி விஷயம்

சென்னை நகர சபை தி. மு. க. அங்கத்தினர்கள் 'ஸ்ரீ' என்று குறிப்பிட வேண்டிய இடங்களில் எல்லாம் திரு என்றும், 'ஸ்ரீமதி' என்று குறிப்பிட வேண்டிய இடங்களில் எல்லாம் திருமதி என்றும் குறிப்பிடலாம்.

ஸ்ரீக்கு ஏற்ற தமிழ்ச் சொல் 'திரு' என்பதுதான். திருவாய்மொழி, திருவாசகம், திருப்பதி என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியங்களில் 'திரு' கையாளப்பட்டு வந்திருக்கிறது அதை எந்தத் தமிழரும் மன நிறைவோடு வரவேற்பார்கள்.

ஆனால் 'திருமதி' என்ற சொல் ஒரு கலப்படச் சொல். தமிழ்க் காதுக்கோ, நாவுக்கோ ருசிக்காத சொல்லாக இருக்கிறது

திரு என்பது திருவாளர் என்று விரியும். திருவாளருக்குப் பெண்பால் சொல் திருவாட்டி என்பது. திருவாட்டி என்று விளிக்கக் கூச்சப்பட வேண்டியதில்லை. அல்லது 'திரு' என்பதை இருபாலாருக்கும் பொதுவாக உபயோகப்படுத்திக் கொண்டு போகலாமே!—"கல்கி"23-8-'59.

"ஊமையன் கோட்டை" ஓர் அறிவிப்பு

இந்த இதழில் "ஊமையன் கோட்டை"—தொடர் கதை மீண்டும் ஆரம்பமாகுமென அறிவித்திருந்தேன். தொடர்ந்து எழுதி முடிப்பதென உட்கார்ந்தபோது சில சிக்கல்கள் தோன்றின.

பொதுவில் 'ஊமையன் கோட்டை" கதை இப்பொழுது சலித்து வெறுத்துப்போன அடிப்படையைக் கொண்டிருக்கிறது. சம்பவங்களில் என்ன புதுமையை ஏற்படுத்தினும் வரட்சித் தன்மையே கிடைக்கிறது. மேலும் ஊமைத்துரையைப் பற்றிய கதையைத் தொடர்ந்து படிக்கும் ஆர்வத்தைத் தோழர்களும் காட்டிக்கொள்ளவில்லை. ஆகவே முடிக்க வேண்டுமே என்பதற்காக முடிப்பதைவிட அந்த முயற்சியைக் கைவிடுவது நலம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இனி, 'ஊமையன் கோட்டை"-கதை இல்லை.

— கண்ணதாசன்.

வழங்கச் செய்துவிட்டனர் என மிகத் தெளிவாகக் காணக் கிடக்கிறது.

மேற்கோளாக ஆயுமிடத்து முதுகுன்றம், மறைக்காடு, குடமூக்கு, மயிலாடுதுறை, திருப்பருப்பதம் எனும் ஊரின் பெயர்கள் முறையே விருத்தாசலம், வேதாரண்யம், கும்பகோணம், மாயூரம் (மாயவரம்), ஸ்ரீசைலம் என வட மொழியில் பெயர்க்கப்பட்டன. அவ்வாறே திருவரங்கம் திருவில்லிபுத்தூர் என்பன ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் என வழங்கி வருகின்றன. அப்படியே இறைவன் பெயர்களும் சமஸ்கிருதத்தில் ஆக்கப்பட்டன.

இதனுல் கோயிலுக்குச் செல்லும் மக்கள் பூசாரியிடம் இறைவன் இறைவியர் பெயர்களைக் கேட்டபோது, அதற்கு அவர்கள் வடமொழியில் அப்பெயர்களைக் கூற, அவற்றைத் தங்கட்கும் தங்கள் குழந்தைகட்கும் இட்டு மகிழ்ந்தனர்.

மேலும் சிலர் வடமொழிக் கணியரிடம் (சோதிடர்) தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகட்கு அவை பிறந்த நாளுக்கேற்ப என்ன பெயர் வைக்கலாம் எனக் கேட்பர். அவர் வடமொழிப் பெயர்களையே சொல்வார். அவற்றையே நம்மக்கள் தம் குழந்தைகட்கு இட்டு வழங்கினர். அப்பெயர்களே வழி வழி வழங்கப் பெற்று தமிழ்க் குடும்பங்களில் நிலை பெற்று வழங்கி வரலாயிற்று.

காலமெல்லாம் தமிழுக்காக உழைத்த டாக்டர் உ. வே. சுவாமிநாதருங்கூட "நான் கண்டதும் கேட்டதும்" என்ற நூலில் திருநெல்வேலிக்கோயில் இறைவன்இறைவியர் பெயர்களைக் குறிக்க முற்பட்டபோது தேவாரத்தில் வழங்கப்பட்ட தூய தமிழ்ப் பெயரான "வடிவுடையம்மையோடு கூடிய திருநெல்லையப்பர் பெருமாள்" என்பதை எழுதாது "ஸ்ரீகாந்திமதி ஸமேத ஸ்ரீ அனவரத நாயகர்" என்றும், 'ஸ்ரீசாலி வாடீஸ் வரப் பெருமான்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய உலகில்கூட சில வடமொழிப் பித்தர்கள் தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர் போர்வையில் தூய தமிழ் மொழியைச் சிதைக்கக் கச்சை கட்டி முந்துற்று இருக்கின்றனர் என்பது அறிஞர்களுக்குத் தெரியும். இன்றையத் தமிழ் மக்கள் உருவால் தமிழர்களேயன்றி பெயரால் தமிழர்களாக இல்லை. காரணம் இடைக்காலத்தில் மொழிச் சிதைவிற்கு இடங்கொடுத்தமையால் தமிழானது தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய பல பெயர்கள் பெற்றுத் திரிந்து வழங்குகிறது. இஃது அறிஞர் பலர் ஒப்ப முடிந்த ஒரு கருத்து.

எப்பொழுதும் ஓர் இனத்தை அழிக்க விரும்பும் பகைவர் முதற்கண் அவ்வினத்தாரின் மொழியையே கொலை செய்ய விரும்புவர். இஃது அரசியல் வரலாறு கற்பிக்கும் பாடம். தமிழகத்தில் இந்த மொழிக் கொலையை ஒருவர் பின் ஒருவராகப் பண்டைய நாள்முதல் செய்துகொண்டே வருகின்றனர். இவற்றிற்கு எல்லாம் தமிழ் தனது தனி ஆற்றலால் காக்கப்பட்டதே அல்லாமல் பிறிதொன்றும் இல்லை என்பது மொழிநூலார் நன்கு அறிவர். இனியாவது தமிழ்மக்கள் தம் இனிய தாய்மொழி பிறமொழிச் சேர்க்கையால் சிதைவுருவண்ணம் மிகவும் விழிப்புடையவர்களாக இருத்தல் சிறந்த கடமையாகும். தமிழ்மக்கள் இனித் தங்கள் இல்லங்களுக்கும், தொழில் நிலையங்கட்கும் தூயதமிழ்ப் பெயர்களையே வைத்தல்வேண்டும். மேலும் தங்கள் பிள்ளைகட்குத் தூய தமிழ்ப் பெயர்களையே இடுதல்வேண்டும். தங்கள் பெயர்கள் பிறமொழிப் பெயர்களாக இருப்பின் அவற்றிற்கு நேரான தமிழ்ப் பெயர்களையோ அல்லது வேறு சிறந்த தமிழ்ப் பெயர்களையோ வைத்துப் பிறமொழிப் பெயர்களை மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்கு முன்னர் அவர்கள் பெயர்களைத் தாமே மிக எளிதாக மாற்றிவிடலாம். பள்ளியில் சேர்ந்த பின்னர் மூன்றும் படிவம் முடியப் பள்ளித் தலைவருக்கு எழுதி மாற்றிவிடலாம்.

மேலும் எங்கெங்கு தமிழ் விளம்பரப்பலகைகள் பிழைபடக் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அதற்கு உரியவர்களிடம் சென்று வேண்டுதல் செய்து திருத்த முயலவேண்டும். நயம்படவும் அன்புடனும் தக்க சான்றுகளுடனும் பேசிப் பலரையும் நம் பக்கம் திருப்பலாம். இற்றைய நாளில் நமது தமிழ்மொழியும் பயின்ற பிறமொழி அறிஞர்கள் நகரத்தைச் சுற்றி வரும்போது நமது தாய்மொழிப் பெயர்ப்பலகைகள் பிழைபடக்காணப் படுமாயின் பிறநாட்டார் நம்மைப் பற்றிக் குறைவாக எண்ண இடங்கொடுக்கும். அதற்கேற்ப செயலாற்றுதல் நல்லது. மேலும் இத்தகைய சீரிய பணிகளில் இளைஞர் உலகம் முனைந்துநின்று ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுவிட்டால் தமிழின் பகைவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைவார்கள் என்பது உறுதி.

-ந. இனியன்.

தி. மு. க.

உறுப்பினராகும்

இறுதி நாள்

31-8-'59.

—தலைமை நிலையம், தி. மு. க.

இளந்தமிழா, எடுவாளை!

வீரத்தின் விளைநிலமே! வலிமை மிக்க
வரிவேங்கைப் புலிப்போத்தே! அஞ்சி யஞ்சி
வேரற்ற மரம்போல சாய்ந்த வண்ணம்
வாளை வீணுக்க நினைத்தா விட்டாய்?
பாராண்ட திறனெங்கே? வீரம் எங்கே?
பழுதுற்ற யாழைப்போல் தொடுவா ரின்றி
சீரற்றுக் கிடக்கின்ருய் தமிழா! உந்தன்
சிந்தனைக்குத் தாளிட்ட கொடிய வன்யார்?

ஈழத்தில், இமயத்தில், கடாரம் என்னும்
எழில்மிகுந்த பொன்னுட்டில் கொடியை நாட்டி
வேழம்போல் நடைபோட்ட வன்மை எங்கே?
வீறுகொண்ட அரியேற்றின் பார்வை எங்கே?
பாழான அச்சத்தால் பதுங்கி வாழும்
பைந்தமிழா! எடுவாளை! இதுஉன் நாடு!
ஆழத்தில் பதிந்திட்ட கூழாங் கல்போல்
அசையாமல் இருக்காதே; வீரங் காட்டு!

தாமரைஇ லைமீது பட்ட தண்ணீர்
தெறிப்பதைப்போல் நம்பிக்கை தெறிக்க வாழும்
தேமதுரத் தமிழோசை முழங்கும் நாடா!
திருநாட்டின் பேராட்சி உன்றன் ஆட்சி!
ஏமாந்து பிறநாட்டின் அடிமை யாக
இருஞ்சிறையில் வாடாதே; விழிகள் தாங்கும்
தீமழையால் சிறைக்கதவைப் பொசுக்கி விட்டுத்
தென்னவரின் புகழ்ப்பரணி பாடாய் தோழா!

கரைகாணுக் கல்வியெனும் கடலின் முத்தே!
கலங்கரையே! உலகத்தின் ஒளியே! வாழ்வே!
தரையெங்கும் நாகரிக விதையை ஊன்றித்
தழைக்கும்படிச் செய்திட்ட பண்பின் குன்றே!
விரைமலரின் நறுமணமே! இயற்கை யோடு
வளர்ந்திட்ட பகுத்தறிவின் பிறப்பே. உன்றன்
கரம்பட்ட இடமெல்லாம் பொன்னுய் மாறிக்
கவின்வீசும் காலத்தை மறந்தா விட்டாய்?

அடிவானில் உதிக்கின்ற கதிரோன் மேற்கில்
அனல்பிழம்பாய் விழுகின்ற வரையில் உள்ள
நெடுநிலத்தில் கொடிநாட்டி ஆட்சி செய்த
நாளெல்லாம் கதையென்று கருதிக் கொண்டு
அடிமையெனும் சேற்றினிலே புரளும் என்றன்
அருந்தமிழா! இதுவா உன் வீரச் செய்கை?
வெடிக்காத எரிமலையாய் இருக்க வேண்டாம்;
வெப்பத்தைப் பகைவர்மேல் அள்ளி வீசு!

இளந்தென்றல் மிதக்கின்ற சோலை யெங்கும்
எழிற்காட்சி குளிராட்சி இன்ப மாட்சி
கிளைகளிலே பறவையினம் ஆடிப் பாடி
கொஞ்சுகின்ற பேரின்பம். இருந்தும் என்ன?
இளந்தமிழா! உன்வாழ்வில் இன்பம் எங்கே?
இறப்புலகை எய்தியதோ? இல்லை யில்லை!
உளங்குமுறி எரிவிழியால் பகையை நோக்கின்
ஒருநொடியில் உனைத்தேடி வந்தே தீரும்!

துறையூர் ந. அலி

புலமையறம் பேணும் தலைவர் பொறுப்பு!

★ நாவலர் எண்பதாவதாண்டு விழா மதுரையில் அண்மையில் நடந்ததை யறிவோம். அதனில் நாவலர் பாரதியாரின் கடவுட் கொள்கையை, தலைவர் மறுத்த முறை நாகரிகத்திற்கு ஒவ்வாதது. இதனை 8-8-59-ம் நாளிட்ட "தென்றல்"லில் கண்டித்து எழுதியிருந்தார், திரு. இளங்கீரன்.

திரு. மு. இராமலிங்கம் அவர்கள் நாவலரின் மாணவர்; சைவ ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வருபவர். ஆனால் அவரும் திரு. மகாராச பிள்ளையின் நடத்தைக்கு வருந்தி, அவருக்குத் தனிப்பட ஒரு மடல் எழுதினர். அதற்கு இதுகாறும் பதிலில்லை. அதனால் அக்கடிதத்தின்மூலம் விடுத்த வினாக்களைப் பொதுமக்களின் பார்வைக்குத் "தென்ற"லின்மூலம் வைக்கிறோம்.

கட்டுரையாசிரியர் கருத்து நல்ல வேலை, சித்தனைக்கு!

— ஆசிரியர்.

நாவலர் ஆராய்ச்சி மனப்பாங்கை, தமிழ் எதிரிகளைத் தாக்கும் வீர வாழ்க்கையை, அவருடைய கைக்கோலை, செங்கோலை வாழ்த்தும் தமிழ் மரபுபற்றித் தலைவர் பாராட்டினார். என்றாலும் இறுதியில் திருமறை மறைத்தற்குரியதன்று என்று வற்புறுத்திய பாரதியார் கருத்தை எதிர்த்துரையாடிய முறை கூட்டத்தினரை உள்ளம் நொந்து வருந்த வைத்தது; பாரதியார் உள்ளம் எப்படி இருக்கும் என இங்கே உரைப்பதற்கியலாது. எனினும் அக்கூட்டத்திலே எதிர்ப்புரையாடிய இசையாமல், தனித்து நாம் எழுதிய கடிதத்திற்கு திரு. மகாராச பிள்ளை பதில் எழுதத் தயங்குவது ஒன்றே அவர் உள்ளமும் நொந்திருக்கவே வேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றதன்றோ?

டாக்டர் பாரதியார் மறையினைப் பற்றித் தெளிவாக விளங்க உரைத்தார். அவையோர் ஆர்வத்துடன் இன்புற்று மகிழ்ச்சிப் பெருக்கைக் கைதட்டியும் தெரிவித்தனர். ஆனால் திரு மகாராசபிள்ளை பாராட்டுக் கூட்டத்தில் தம் கருத்துவேற்றுமையைக் காட்டிய முறை பலரை எவ்வாறு துன்புறுத்தியதென்று அளவிட்டு உரைப்பது எளிதன்று என்றாலும் சிறிது கூற வேண்டியதின்றியமையாததாகிவிட்டது.

தொல்காப்பியம், திருமந்திரம், திருக்குறள் இம்மூன்றும் தமிழின் முக்கண்களாகும். இவற்றைக் கூடத் தக்க முறையில் கற்கத் தவறிய பிள்ளை மூன்றையும் குறைத்து மதிப்பிடவும் தொடங்கிவிட்டார். பாரதியாரை அவர் எங்ஙனம் பாராட்டமுடியும்? "காட்டும் குறியும் கடந்தவர் காரணம் ஏட்டின் புறத்தில் எழுதி வைத்து என் பயன்?" என்ற திருமூலப் பெருந்தகையின் கருத்தே அவருக்குப் புரியவில்லை. அம்மந்திர ஈற்றடி "ஆட்டின் கழுத்தின் அதல் கிடந்தற்றே" என்பது. அதனை "அதர் கறந்தற்றே" என மாற்றிய போலிப் பாட வேறுபாட்டையும் அதற்கு ஒரு பொருந்தாக் கதையும் பெருந்தவருக அவருக்கு விளங்கவில்லை என்றுதான் உரிமைத் திருமுகம் வரைந்தோம். அதையும் கூர்ந்துணரவில்லை.

டார்வின் கூர்தல் முறை (Evolution theory) விளக்கமும் திருமூலர் கண்டு காட்டியுள்ளார். நம் உடம்பில் சில உறுப்புகள் பயன்படாமல் இருப்பதேன்? ஒரு காலத்தில் பயன்பட்ட உறுப்பு இப்போது பயனின்றி நிற்பதுண்டு. குடல்கொடி (Vermiform appendix) அத்தகையது. அப்படியே ஆட்டின் குடல் அறைகள் அசை போட ஏற்றபடி அமையும் வாயுப்பைபோன்ற அமைப்பிருந்து வளர்ந்தபின் அது பயன் இன்றி நிற்கிற உறுப்பாக 'அதாகக் கிடப்பது' அதர் வழி; கூர்தல் வழி. இங்குள்ள மொழியமைப்பும் பொருள் அமைதியும் உணராமல் "அதர்கறந்தற்றே" என்று கொண்டு கற்பனையால் அதை மேலும் சிதைப்பது எவ்வளவு தவறு எனத் தெரிய வேண்டுமன்றோ? இதுகூடத் தெரியாதவர் ஆராய்ச்சியாளர் ஒருவரைப் பாராட்ட இயலுமா? இதுமட்டுமா? படித்தவர் பாட்டைக் கெடுக்கும் கதை மிக மிக நீளத் தொடங்கிவிட்டது. இதுவா புலமையறம் பேணும் பொறுப்பு?

தொல்காப்பியர் "மந்திரம் என்பது என்ன?" என்ற வினவுக்குத் தக்க விடை தருகின்றார். திருவள்ளுவரும் அதனை அப்படியே விளக்கம் தந்து எடுத்தாளுகின்றார். இவ்வுண்மை உணர்ந்த தமிழ் அறிஞர்களிடம் கேட்டுணராமல் இவ்விரு பெரு நூல்களையும் இழுத்து திரு. மகாராச பிள்ளை தம் கருத்து வேற்றுமைச் சேற்றுள் அமிழ்த்த முயன்றது பெரிதும் கண்டிக்கத்தக்கது.

"நிறை மொழிமாந்தர்
ஆணையில் கிளந்த
மறை மொழிதானே
மந்திரம் என்ப"
"நிறை மொழிமாந்தர்
பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்"

இவற்றுள் முன்னது தொல்காப்பியம். பின்னது திருக்குறள். மறைந்திருக்கும் பேருண்மைகளை ஆளானவர் உணரும்வண்ணம் விளங்கக் குறித்து கூறப்பட்டிருப்பவைகளையே மந்திரம் என்பவர் தமிழ்ச் சான்றோர். சுட்டிக் காட்டுவதும், அவ்வழி நின்று குறிப்பாக உணர்வதும் என்ற இரு நிலைகளையும் கடந்த சான்றோர் வாழ்க்கை முறையை எழுதி வைப்பது ஆட்டின் கழுத்தில் அதர் கிடந்தது போன்று பிறர்க்குப் பயனற்றதன்றோ? எனினும், ஆளாகாதார் ஆளானுரைக் கண்டு உய்யார் என்று அப்பர் அருளாட்சி தெரிவிப்பதுபோல் ஈந்து முறைப்படி அனைவர்க்கும் வாழ் வேணியில் காட்டிவிடுவதுதான் மறை மொழி; அதன் பயன் வாய்த்தே தீரும்; சொல்லியபடி தீரும்; எனவே அதனைச் சான்றோர் வாய் மொழி என்பர். அது சான்றோர் குறிக்கோளை நிறைவேற்றியே தீரும். இக்கருத்தே நிறை மொழி என்ற தொடரால் நாமுணர்வது. அகத்திலும் கண் தேவை.

திரு மகராசபிள்ளை திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையைத் தாக்கும் போது, அவர் அமுதை நஞ்சாக்குபவர் என்றார். அது இவருக்கே பொருந்திவிட்டது கண்டு அவையோர் வியந்தனர். ஆம், அவர் செங்கோலை வாழ்த்தியபோது நயந்த அவையோரே இதனையும் வியந்தனர்.

சுருங்கக் கூறின், திருவாவடுதுறைப் பதிப்பில் 'கறந்த' என்ற பாடபேதம் குறிக்கப்பட்டிருப்பினும் டார்வின் முதலிய விஞ்ஞானிகளைக் கற்ற நாகரிக மக்கள் 'அதர்கிடந்த' என்ற பாடம் திருமூலப் பெருந்தகையின் பெருமையுணர்த்துவது என உணரலாம். மகாராச பிள்ளையிடம் தனக்குள்ள கருத்து வேற்றுமையைக் கண்டிக்கும் இடம் அதுவன்று என்று பலர் அன்று கருதியதில் தவறு ஒன்றுமில்லை. கூட்டத்தில் மறுத்துரைக்காமல் தனித்து உரிமையோடு எழுதிய கடிதத்திற்கும் பதில் எழுதாமல் இருப்பது இன்னும் பன்மடங்கு வருத்தம் தருவதாகும். டாக்டர் பாரதியார் அங்கே எழுந்து மறுக்காமல் விட்டதும் அவர் பெருமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்தது கருதி, நாம் பெரிதும் மகிழ்கின்றோம்.

-மு. இராமலிங்கம் பி. ஏ.

வெளிநாட்டு ஏடுகளில்...

"சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் மலாயா வருகிறார்!" என்ற சேதி கேட்டு மலாயாவில் உள்ள சமயவாதிகள், அவர் பயணத்தைத் தடுக்க முனைந்துள்ளனர். அத்தவறைக் கண்டித்து எழுதியுள, பல ஏடுகள். கோலாலம்பூர் "தமிழ்நேச"னில் தோழர் ரெ. ஸ்ரீனிவாசன் "நிகழ்ச்சியும் நினைப்பும்" என்ற தலைப்பில் தந்த கருத்துரை, இதோ! இது வெளியான நாள் 6-7-'59.

ஈ. வி. கே. சம்பத் இங்கு வருவதாக ஒரு செய்தி சில நாட்களுக்கு முன் வெளியாயிற்று. அவரை வரவேற்பதற்குப் பல ஊர்களில் வரவேற்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சம்பத் இந்தியாவில் ஆட்சிபுரியும் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க்கட்சியில் இருப்பவர். பார்லிமெண்டு அங்கத்தினர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவர் என்பது எல்லாருக்கும் தெரியும்.

என்றாலும் அவர் இந்நாட்டுக்கு வருவதில் யாருக்கும் நஷ்டமில்லை. ஆட்சேபமும் இருக்கமுடியாது.

ஆனால் அவர் வருகையை யாரோ சிலர் ஆட்சேபித்துள்ளதாக, பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

யார் ஆட்சேபித்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. என்றாலும் ஆட்சேபித்தவர்கள் இந்த நாட்டுக்கு ஒரு பெரிய தீமையை செய்துள்ளார்கள் என்பதே நம்முடைய திடமான கருத்து.

ஈ. வி. கே. சம்பத்தை நமக்கு நன்றாகத் தெரியும். அவருடைய பேச்சுகள் பலவற்றை நாம் நேரிடையாகக் கேட்டுள்ளோம்.

பத்திரிகையில் வெளியானதைப் போல அவர் கருப்புசட்டைக்காரருமல்ல. கம்யூனிஸ்டும் அல்ல

அதற்கு நேர்மாறாக, கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை தாக்குவதில் தமிழ் நாட்டிலேயே தன்னிகரற்றவர் சம்பத்.

திருச்சியில் நடந்த தி. மு. க. மகாநாட்டில் அவர் கம்யூனிசத்தை எதிர்த்து நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்டோம். ஸ்டாலின் என்ன-லெனினே வந்திருந்தாலும், தர்க்க ரீதியான அவரது வாதத்திற்கு பதில் சொல்லியிருக்க முடியாது.

கம்யூனிஸ்ட்கள் இரண்டாவது உலக யுத்தத்தின்போது அடித்த பல்டிகளை விவரித்தார். இந்தியா சுதந்திரமடைந்த பிறகு அவர்கள் போட்டுக்கொண்ட இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தினார். மகாநாட்டிற்கு வந்திருந்த மக்கள் உண வருந்துவதற்குக்கூடப் போகாமல் அவரது பேச்சை ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர் பேச ஆரம்பித்த நேரம் நண்பகல் 12 மணி. அவர் தமது பேச்சை முடித்தபோது பிற்பகல் மணி இரண்டு இருக்கும். பசி வயிற்றைக் கிள்ளினாலும் ஒருவராவது பந்தலைவிட்டு எழுந்து போகவில்லை!

அத்தகைய சிறந்த பேச்சாளர், கம்யூனிஸ்ட்களின் கடும் வைரி. இந்த நாட்டுக்கு வந்தால் என்ன கெட்டுப்போகும்? யாருக்கு தீங்கு ஏற்பட்டுவிடும்? என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

என்றாலும், திரு. சம்பத் இந்நாட்டுக்கு வருவதை எதிர்க்கிறார்களாம், சில தொட்டால் சிணுங்கிகள்!

அவர்களுக்குத் தோட்டத்தை துண்டாடத் தெரியலாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உண்மையான லட்சியம் தெரியாது. அதன் தலைவர்களைப் பற்றியும் அறியமாட்டார்கள் என்பதைப்பத்திரிகைளில்வெளியான செய்திகளே புலப்படுத்திவிட்டன.

தி மு கழகம் கருப்புச் சட்டை இயக்கமல்ல. பலாத்காரத்தில் நம்பிக்கைகொண்ட கட்சியும் அல்ல.

கருப்புச் சட்டை இயக்கம் திராவிடர் கழகம். படத்தை எரித்தவர்கள், விநயகர் சிலையை உடைத்தவர்கள் திராவிடர் கழகத்தினர்; தி மு. க. அல்ல.

திராவிடர் கழகத்தின் லட்சியத்தை ஏற்றுக்கொள்ளாமல் பிரிந்து போய்த் தனி ஸ்தாபனம் அமைத்துக்கொண்டு செயலாற்றுகிறார்கள் தி. மு. கழகத்தினர். அக்கழகத்தின் தனிப் பெரும் தலைவர் அண்ணாதுரை. அதிகாரத்தினால் அல்ல, அன்பினால் அவர் விடுக்கும் கட்டளைகளை மீறாத தம்பிமார்கள் அதில்லட்சக்கணக்கில்உள்ளார்கள்.

மற்றக் கட்சிகளில் இருக்கும் தலைவர்கள் அல்லது அங்கத்தினர்களைப்போல தி. மு. க. அங்கத்தினர்கள் மந்த மதியினர்கள் அல்ல.

நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதத்தினர் பட்டதாரிகள், படித்தவர்கள், பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருப்பவர்கள்!

அதுமட்டுமல்ல, அத்தனை பேரும் தமிழர் பண்பாட்டை அறிந்தவர்கள், தமிழ் இலக்கியத்தைக் கற்றவர்கள், தமிழ் மறையாம் திருக்குறளை முற்றாகப் படித்தவர்கள்.

வயதில் குறைந்தவர்கள் என்றாலும் அறிவில் சிறந்தவர்கள், ஆற்றல் மிக்கவர்கள்.

இதைத் தற்புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை. பல்வேறு கட்சிகள் செயல்படுவதையும், அக்கட்சிகளின் தலைவர்களையும் நேரில் பார்த்து கண்டறிந்த உண்மைகளை சீர்தூக்கிப் பார்த்த பின்னரே இந்த முடிவை வெளியிடுகிறோம்.

காங்கிரஸ் கட்சியில் கட்டுப்பாட்டை கண்டோம். கம்யூனிஸ்ட் கட்சியில் கட்டுக்கோப்பைக் கண்டோம். ஆனால் தி. மு. கழகத்தில் தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அத்தனையும் ஒருசேர இருக்கக் கண்டோம்.

அத்தகைய கழகத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவர், கம்யூனிஸத்தின் மாபெரும் விரோதி, மலாயாவுக்கு வருவதை எதிர்த்து யாராவது அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் கொடுத்திருந்தால், அவர்கள் மலாயாவுக்கு சேவை செய்தவர்கள் ஆகமாட்டார்கள் என்பதே நமது திடமான அபிப்பிராயம்.

அனுப்பியவர் :

-சி. சுப்பிரமணியம்
கோலாலம்பூர்.

ஊரார் பணத்தில் தேரோட்டும் சீரார் சிவஞானம் காணீரோ!

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

அவர்களது தோளிலே தொத்திக்கொள்ள நேரிட்டதால் மறந்தவர்களைப்போல் நடிக்கிருர்கள். 1953-'55 ஆண்டுகளில் கழகத்தின் வளர்ச்சியினை தமிழரசுகளாலே பொறுத்துக்கொள்ள முடியவில்லை. புதிய கல்வித் திட்டப் பேச்சாளர்களாகப் பெருமைக்குரிய சிவஞானமும் அவரது படையினரும் புறப்பட்டனர்! பழைய தலைவருக்குப் பாதபூசைகளைச் செய்துதங்களுடைய பாராட்டினைத் தெரிவித்துக்கொண்டார்கள், சிவஞானத்தைக் கழுத்திலே கைகொடுத்து வெளியேற்றத் துடித்தவர்கள்! சிவஞானமும் அவரது சிலம்படியாளர்களும் தப்ப வழி தெரியாது தங்களது நடைமுறைக்குப் பல காரணங்களைச் சொல்லிக் கொண்டனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்த சிவஞானத்தின் மட்ட ரகமான செயல்களிலே முதல்தரமானது அறிஞர் அண்ணு அவர்களின் நிதியுதவி நாடகமான "நீதிதேவன் மயக்க"த்தைத் தியாகராயர் கல்லூரியில் நடத்தக்கூடாதெனவும், நடைபெற்ருல் கல்லூரி வாயிலில் மறியல் செய்வேன் என்று அறிக்கை வெளியிட்டதும்தான். கல்லூரியில் நாடகம்—நிதி திரட்டுவதில் முதற் பணி! நாடகத் துறை சிவஞானங்கள் நடமாடமுடியாத மேடையாகும். இரு நாட்களில் ரூ. 10000 தேடித் தந்த அறிஞர் அண்ணுவின் அருஞ்செயலை, அறிவாலயம் கண்டவர்கள் அன்றிலிருந்து இன்றுவரையிலும் பாராட்டுகிருர்கள். ஆனுல் தமிழரசுக் கழகத் தலைவர் மறியல் செய்வேன் என்ருர். அதுவும் சொன்னபடி செயலாற்ருமல் இருசப்பக் கிராமணித் தெருவிலேயே ஒளிந்துகொண்டார்! சிவஞானத்தார்களின் தரங் கெட்ட செயல்களுக்கு இந்த ஒரே ஒரு சான்று போதுமல்லவா? தமிழகத்தின் புது வாழ்வும் தனியரசும் சுயாட்சியும் ம. பொ. சிக்களின் இலட்சியமென்ருல் அவர்களுடைய செயல் முறைகளின் திசையோட்டம் என்ன என்பதுதான் எவருக்குமே புரியவில்லை! 1956-ல் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் முடிவு செய்தார்கள்.

"தமிழரசுத்தோழர்களே! அவர் தம் தலைவரே! நீங்கள் எல்லாம் வன விலங்குகளா அல்லது வானம்பாடிகளா? அவைகளிலும் சிறப்பாக அரசியல் வௌவால்களா? நீங்கள் விரும்புவது காங்கிரஸ்கட்சியையா அல்லது பிரிவினைப் பேசும் தமிழரசுக் கழகத்தையா? எங்கே இருக்கப்போகிறீர்கள்? உங்களது உண்மையான உருவத்தை உலகுக்கு வேண்டாம்—தமிழகத்திற்கு மட்டுமாவது திரையிட்டு மறைக்காமல் காட்டுங்கள்!" என்ற முறையிலே கட்டளை பிறப்பித்தார்கள்! இவர்கள் கண்ணீர் வடித்துக் கதறினுலும் கால் பிடித்து வணங்கத் தயாராக முன்வந்தாலும், காங்கிரஸ்காரர்கள் முக்கியமாக வட நாட்டுத் தலைவர்கள் இவர்களின் கழுத்தை நெறிக்கத் துடித்தார்கள். இதனைப் புரிந்துகொண்ட சிவஞானம் காங்கிரசை விட்டுக் கழகத் தோழர்கள் வெளியேற வேண்டியதுதான் என்று பேசினுர் - எந்தக் கொள்கையுமில்லாமல் திராவிட எதிர்ப்பிலேயே உயிர் வாழ்ந்தவர்கள் "இனி எதைப் பேசிப் பிழைப்போம்?" என்ற சிந்தனையோடு புறப்பட்டார்கள். 1957 பொதுத் தேர்தலுக்கு முன்னுல் சேலத்திலே இருநூறு பேர்களே கூடிய மாநில மாநாட்டினைக் கூட்டினுர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தவிர்த்த ஏனைய எதிர்க் கட்சிகளுக்குத் தேர்தலில் தங்களது ஆதரவு உண்டு. "தேவையானேர் எங்களைத் தேடி வரவேண்டாம். சொல்லியனுப்புங்கள். நாங்களே ஓடி வருகிருேம்!" என அறிவித்தனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை — இலட்சியங்களைப் புரிந்துகொள்ளாமலே மறுத்துப் பேசும் மாநிலங்கள் ம. பொ. சிக்கள் "சுயாட்சிதான் தேவை! தனியரசு வேண்டாம்" என்பவர்கள். "புதுடில்லி இணைப்புவேண்டும். மாகாணத்திற்குப் புது அதிகாரங்கள் முக்கியமாக வேண்டும்!"-இப்படியும் பேசுவார்கள். எல்லையை மீட்கப் போய் ரயிலை நிறுத்துவார்கள். அந்தச் செயல் அடி முட்டாள்தனம் என்று நேரு சொன்னுல் "நன்ருகச் சொன்னீர்கள்" என்ற முறையில் தங்கள் நன்றியினைக் கூறுவார்கள்! "நேரு சொன்னது நாவடக்கமற்ற தன்மை. சிவஞானத்தைச் சொன்னுல் அது தமிழர்கள் அனைவரையும் சொன்னதாகத்தான் கருதுகிருேம். கண்ணியமிழந்த நேருவைக் கண்டிக்கிருேம்!" என்று முன்னேற்றக் கழகம் சொன்னுல், ரயிலை நிறுத்திக் காட்டுவோம் என்று கிளர்ச்சியினைக் கொண்டு வந்தால், இதனைத்தான் முக்கியமாக எதிர்த்தார்கள். அறிஞர் அண்ணு அவர்கள் அழகாக அறிவுரை வழங்கினுர்கள்! கனக விசயர்கள் செங்குட்டுவனைப் பழிக்கவில்லை. தமிழர்களைத்தான் இழி மொழிகளாலே ஏசினுர்கள். இருந்தாலும் செங்குட்டுவன் குமுறியெழுந்தான்! நேரு தமிழரசுக் கழகத்தவரை மட்டுமே திட்டினுலும் முன்னேற்றக் கழகம் தன்க்காகவும் ஏற்றுக்கொண்டு "திரும்பப் பெறுக" என முழக்கமிட்டது. சிலப்பதிகாரம் படித்த சிவஞான கிராமணியார் என்பவர் இதனைக்கூடப் புரிந்துகொள்ள மறுத்துவிட்டார்! கழகத்தவர் மீதும் தலைவர்கள் மீதும் தரங்கெட்ட வார்த்தைகளை யெடுத்து வீசுவதற்குத் தயாராகிவிடுகிறவர்கள் தங்களைத் தற்காத்துக்கொண்டார்களா என்பதைக் கேட்டுப் பாருங்கள். "தமிழரசுக் கழகம் பதவி ஆசையினுல், திராவிடர் கழக-திராவிட முன்னேற்றக் கழக முறைகளிலேயே வளர விரும்புகிறது. இதனையும் ஐக்கிய முன்னணிப் போர் முறைகளினுல் நம்முடைய அணிக்கு அழைத்து வர வேண்டும்" என்று கம்யூனிஸ்ட்கள் சதி செய்திருக்கிருர்கள், தாங்கள் தயாரித்துக் கட்சி யூனிட்டுகளுக்குத் தந்துள்ள தங்களின் ரகசிய அறிக்கைகளில்! இந்த உண்மை முன்னேற்றக் கழகத்தவர்க்குத் தெரியும். ஆனுல் முத்தமிழ் வித்தகர்களென்று முரசு கொட்டுகிருர்களே, எதிரிகளைக் காணமுடியாத போர்க்களத்தில் தன்னந்தனியாக வீர நடை போடுகிருர்களே, வாளெனக் கருதி செங்கோல் சுழற்றுகிருர்களே, இந்த உணர்ச்சியற்ற உருவங்களுக்குத் தெரியாது! தெரிந்திருந்தால் இவர்களாலே கொலைக்காரர்களெனக் குற்றம் சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட்களுடன் கை கோர்த்துக்கொள்ள முன் வருவார்களா? தங்கள் எஜமான் ஆச்சாரியைக் கவிழ்த்த கரையாளருடனும் கிருட்டிணமூர்த்தியுடனும் தேர்தல் கலப்பு மணம் செய்துகொள்வார்களா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை சிவஞானம் கம்பெனியார் ஏற்றுக்கொள்ளவில்லையாம். ஆனுல் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகத்திற்குச் செய்யப்படும் அநீதிகளைக் கண்டிக்கப் பல நேரங்களில் முன்வருகின்றனர். கழகம் ஐந்தாண்டுத்திட்டக் கண்டன நாள் நடத்திய நாட்களில் சிவஞானம் சொன்னுர் "இந்தப் பிரச்னையைத் தமிழகத்தின் பொதுப் பிரச்னையாக்க வேண்டுமே. தவிர முன்னேற்றக் கழகத்தின் சொந்தப் பிரச்னையாக்கி விடக்கூடாது" என்று! இவருடைய கருத்து காலங்கடந்து வெளிவந்த அற்புத ஆய்வுரையல்ல. இந்த வகையிலாவது முன்னேற்றக் கழகத்துடன் ஒட்டிக்கொண்டு வஞ்சிக்கும் வடநாட்டினை நன்குணர்ந்துவரும் தமிழ் மக்களிடம் தானும் முன்னின்று பணியாற்றுவதாகப் பறைசாற்றிக்கொள்ளத்தான்! ஆனுல் அவருடைய ஆசை மொழிகளுக்குச் சுலபத்திலே இசையவும் எந்த நிலையிலும் அவரது ஆதரவினைப் பெறவும் நாம் தயாராக இல்லை! தேவிகுளம், பீர்மேடு கண்டன நாட்கள் வேலைநிறுத்த வேளையில் சிவஞானம் கொஞ்சம் சுறுசுறுப்பாகவே வேலை செய்தார்.. "அறிஞர் அண்ணு அவர்களைச் சந்திப்பதும் உறவாடுவதும் அவருக்கு விருந்துண்பதுபோல" என அவரே ஒருமுறை எழுதிவைத்தவரல்லவா—அதனுலே சர்வகட்சிக் கூட்டணியிலே நல்ல இடத்தினைப் பெற்ருர். தமிழகத்தில் எங்குச் சென்ருலும் அண்ணுவைப் பற்றியே புகழ்ந்து பேசினுர். இந்தக் கூட்டுறவைத் தகர்க்க எந்த சக்தியாலும் இயலாதெனப் பலப் பரீட்சைக்கு அறைகூவல் விடுத்தே கருத்துக்களைத் தந்தார்! ஆனுல் அடுத்த சில நாட்களிலேயே அவரின் பாதை மாறியது. பொதுத் தேர்தல் வந்தது அவருடை படைவீரர்கள் சிதறியோடினுர்கள் கம்யூனிஸ்ட்கள் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியினர், சோசலிஸ்ட்கள், சுயேச்சையாளர்கள், இப்படி யார் யாரோ, உத்தமபாளையம் தொகுதிபோன்ற இடங்களில் காங்கிரஸ்காரர்களும்கூடத் தமிழரசுக் கழகத்தின் நிபந்தனையற்ற சரணுகதியடைந்த உதவியினைப் பெற்ருர்கள். பலன் அடைந்தவர்கள் தமிழரசுக்கழகத்தவரா—வேண்டாத ஆதரவினைத் தள்ளமுடியாமல் தழுவிக் கொண்டவர்களா? என்பதனைச் சென்ற தேர்தல் முடிவுகளை வைத்துக் கணக்கிடலாம்! அதன் பிறகு வழக்கம்போலவே தலைவரும் தொண்டர்களும் முன்னேற்றக் கழகத்தின் மீது தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தத் தவறவில்லை. எழுத்தும் பேச்சும் கூச்சலிடும் கூடாரமாகிவிட்டது, கலாச்சாரக்கழகம்! அரசியலிலே அனுதைகள் என்று சொன்னுல் சிவஞானங்களுக்கு சினம் கிளம்பலாம். அரசியலிலே தாங்கள் எதிர்பார்த்த இடத்தினைப் பெறமுடியாதவர்கள் என்று குறிப்பிட்டால் அவர்களே இதனை ஒப்புக்கொள்வார்கள்! நகரசபைத் தேர்தல்களுக்குப் பின் "தினத்தந்தி"யில் தன் பெயர் வரவேண்டுமென்ற ஆசையினுல் சிவஞானம் அடிக்கடி அறிஞர் அண்ணு அவர்களைப் பற்றிப் பேசுகிருரே தவிர முன்னேற்றக் கழகத்தை முறியடிக்கும் ஆண்மையல்ல!

திராவிட முன்னேற்றக் கழகம் கேரள மாநிலத்தின் கிளர்ச்சிகளை எந்த வகையிலே கணக்கிட்டு செயல்பட்டதைக் கம்யூனிஸ்ட்களும் அறிந்துவரவேற்ருர்கள். அமைச்சர்களின்—அந்தக் கம்யூனிஸ்ட் சர்க்காரின் தவறுகளைச் சுட்டிக்காட்டினுேர். அதனையும் நல்ல அரசியல் கம்யூனிஸ்ட்கள் பாராட்டினுர்கள்! கேரள சர்க்காரின் வீழ்ச்சியைப்பற்றிய எதிர்கால நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருக்கும்படி கழகத்தின் தலைவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டதாக காம்ரேட் ராமமூர்த்திசென்னைப் பொதுக்கூட்டத்திலே தெரிவித்துவிட்டார்! அவர் தன்னைக் கண்டு பேசவில்லையே என்ற கலக்கத்தினுலும் கள்ள எண்ணத்தினுலும் கவலைப்படுகின்ற சிவஞானம், அண்ணுவைப் பற்றி அவதூறு பொழிகிருர்! ராமமூர்த்திக்குத் தெரியும், எந்த நேரத்தில் எவரைப் பார்க்க வேண்டும் என்பது! கேரளத்து முன்னுள் அமைச்சர் டி. வி. தாமசுக்குத் தெரிகிறது, யார் யார் ஒன்று சேர்ந்தால் சென்னை சர்க்காரைச் சிக்கலிலே மாட்ட வைக்கமுடியும் என்ற உண்மை! இதனை அப்பாவிச் சிவஞானம் அறியவில்லையெனில் அவர் நம் அனுதாபத்துக்குரியவராகிருர்! கலாச்சாரக் கழகத்தின் அரசியல் அறிஞர் அரிஸ்டாடிலான சிவஞானத்தின் அருமைச் சீடர்கள் இனிமேலாவது இதனைப் புரிந்துதெரிந்துகொண்டால் தப்பிப் பிழைக்கலாம்! ஜனநாயகக் காங்கிரஸ்தான் தமிழகத்தின் தலைசிறந்த கட்சியாக வளர்ந்து என்றுவது ஒரு நாள் துரோகிகளைத் தண்டிக்கும் என்று மதுரைப் பூர்வாங்க மாநாட்டில் வாழ்த்தினர், பேரறிஞர் பட்டத்தை எதிர்பார்த்திருக்கும் ஜி. உமாபதியும் அவருடைய தலைவர்களும். இவர்கள் தற்போதைக்குத் தங்களின் மாஜிக் கடவுளிடம் சிக்கியுள்ள காங்கிரஸ் சீர்திருத்த உருவங்களைச் சந்திக்கட்டும் இவர்களின் ஏவலுக்கு காத்திருக்கும் ஏடுகளும் ஏசல் மொழி வீசுகின்ற சொல்லின் செல்வர்களும் தலைநகரை மறந்து, தமிழகத்தை மறந்து, தமிழை மறந்து, தமிழ்க் கலாச்சாரத்தை மறந்து, தன்னைமட்டும் மறக்காமலிருக்கும் தலைவர் இன்னும் எத்தனை நாளைக்குத் தமிழரசுக் கழகம் நிலைக்கும்? எந்த நாளில் நாமெல்லாம் 'ராஜாஜி'யின் சுதந்திராக் கட்சிக்குள்ளே புகுந்துவிடுவது என்ற சேதிகளைத் தெரிந்து வைத்துக்கொள்வது, முன் கூட்டி இடம் பிடித்துக்கொள்ள உதவக்கூடும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களையும் எந்தத் துறையிலேயிருந்தாலும் கழகத்தின் புகழ்பாடும் நல்லவர்களையும் நரகல் துடையிலே தூற்றுவதுதான் அவர்களாலே செய்யக்கூடிய சாதனையே தவிர, அதனுலே கழகத்தின் வருங்காலம் பாதிக்காது; பங்கப்படாது! பகுத்தறியும் பண்பிருந்தால் சிவஞானம் விரும்புவதுபோல கழகத்தினை எதிர்த்திட முன் வாருங்கள்! "தமிழரசுக் கழகம், தட்டிவிட்டால் தலைகுப்புறக் கவிழும் தகர டப்பா" என்ருர் ஒரு பன்மொழிப் புலவர்! சிவஞானங்கள் சிந்திக்கட்டும்!

—கூடலரசன்.

ஜூபால் பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
சங்குபிள்ளை, திண்டுக்கல் ரோடு, மதுரை.

காரைக்குடிக் கவியரங்கம்

உ. குறள்நெறிக் குடும்பத்தில்

தாய்

பொங்கிவரும் பொன்னியெனப் பாக்கள் ஈந்தே
பைந்தமிழில் இலக்கியத்தை வளர்க்க வாழும்
தங்கிவளர் கற்பனைகள் செழித்த ஊற்றே!
தாயகத்தின் சுவைக்கவியே! கண்ண தாச!
தங்கும்விலை தென்னகத்தின் காரை நாட்டில்
குறள்விழாவின் கவியரங்கின் தலைவ! உள்ளம்
பொங்குகின்ற உணர்வோடு வணக்கம் கூறி
பைந்தமிழில் மழலையால் கவிதை சொல்வேன்!

இங்குற்ற அறிஞர்கள்! இந்த நாட்டின்
எதிர்காலம் வகுக்கின்ற இளைஞரேரே!
மங்காத தாயகத்தின் மாண்பால் வாழ்வீர்!
மதிக்காத பகைவரையே வீழ்த்தும் நாட்டீர்!
எங்கெங்கும் தமிழ்நாட்டின் சிறப்பைச் சொல்ல
இன்குறளின் கொள்கையினை எடுத்துக் கூறும்
தங்குறள் மன்றத்தீர்! பெண்மை நல்லீர்!
தளிர்க்கின்ற அன்பாலே வணக்கம் சொல்வேன்!

பத்துமாதம் சுமந்துநமைப் பெற்றெடுத்தாள்;
பாசத்தால் பாராட்டித் தமிழும் சேர்த்தாள்;
முத்தென்றும் சொத்தென்றும் நம்மைக் கூறி
முத்தமிட்டு வளர்த்தாளைப் பாட மாட்டேன்;
தித்திக்கும் செழுந்தமிழில் பேசி இந்தத்
திராவிடத்தில் மக்களையே பெற்றெடுத்த
எத்தனையோ தாய்களுண்டு; அன்னாரெல்லாம்
அன்பாலே வளர்த்தார்கள்; அன்னை வாழ்க!

இத்தரையில் நாம்வந்து பிறந்த போது
இசையோடு தமிழ்மொழியில் அழுதோமன்றோ?
முத்தமிழில் ஒருதமிழாம் நடிப்பினோடு
முறுவலினை இதழிடையே உணர்வைத் தேக்கி
வித்தகன்போல் கைகால்கள் ஆட்டி அன்றே
இயலிணைய "ம்மா" என்றும் அழைத்ததுண்டு!
வித்தகரே! முத்தமிழாம் நம்முயிர்ப்பை—
வியன்தாயைப் பாடுகின்ற எண்ணமில்லை!

யாரைத்தான் பாடத்தான் போகின்றாய்நீ
என்றுரைக்கும் நல்லவரே! தமிழ மக்கள்
சீரைத்தான்; சிறப்பைத்தான்! உலகில் பெற்று
சீர்தமிழைக் கன்னடத்தை மலையாளத்தைப்
பாரைத்தான் இனிமையாக்கும் தெலுங்கை ஈன்று
பண்பினையும் வளத்தினையும் சரித ஏட்டில்
திரத்தால் யாத்துவைத்த தாயகத்தைத்—
திராவிடத்தை- நம்தாயைப் பாடல் கேட்பீர்!

பிறந்தஉடன் நம்முடலம் புரண்ட மண்ணின்
புனிதத்தை அறியாரும் உண்டோ? பின்னர்
கரத்தாலே தவழ்ந்தஉடன் சுவைத்துத் தின்ற
கனிச்சுவைசேர் மண்ணினையே மறப்பார் உண்டோ?
சிறப்பான இளமையிலே தலைவி மேவிச்
சேர்த்தஇன்ப மண்தரையை நினையார் உண்டோ?
பொருளீந்தே உண்டிதந்த தாயகத்தை
புவியில்நாம் மறந்திடுதல் நன்று தானோ?

இறந்தபின்னர் இணைவதுமிம் மண்ணில்தானே?
இணைகின்ற கற்பனைகள் எங்கே ஊறும்?
குறள்நெறியைத் தந்ததுமித் தாயேயன்றோ?
குறள்நெறிசேர் குடும்பத்தை அமைத்த தாய்தான்
நிறையழிந்து சிறப்பழிந்து நிற்றல் காணீர்!
குறள்நெறியில் சென்றிடவே நினைக்கும் நாட்டீர்!
குறள்வழியே சென்றேநம் தாயகத்தைக்
களிப்படையச் செய்திடுதல் கடமையன்றோ?

வள்ளுவனார் வகுத்தவழி செல்லாமல்நாம்
வானத்தை நோக்கியதால் வாழ்விழந்தோம்!
சொல்லூறச் சுவையூறும் கவிதை யாத்துச்
சிறப்புற்ற நாளெல்லாம் மாண்டு போக
நல்லறத்தில் வாழ்ந்திட்ட குடும்பம் இந்நாள்
நலமிழந்து போனதுமேன்? நாட்டின் நல்லீர்!
சொல்லாத கருத்துண்டோ நங்குறள் தன்னில்?
வல்லகுறள் நெறி மறந்தே வாழ்விழந்தோம்!

அறத்துப்பால் தந்திட்டார்; அறத்தில் சேரா
அறம்பிறழ்ந்து சென்றதனால் இழந்தோம் மாண்பே!
பொருட்பாலை ஈந்திட்டார்; பொருந்தா வழியில்
புகுந்ததனால் பொருள்நமக்குப் பொருந்தவில்லை!
திருவாழ்வின் இயல்விளக்கும் காமப் பாலில்
தோயாமல் இல்லாத 'மோட்சம்' எண்ணிப்
பெருவாழ்வை இழந்தின்று தவிக்கின்றோம்நாம்;
தாயகமாம் திராவிடமும் தவிக்குதிந்நாள்!

தாயகத்தை அடிமையாய் ஆக்கி விட்ட
திராவிடத்தீர்! குறள்நெறியைக் கொளுத்தி விட்டீர்!
சேயகத்தை எண்ணியுளம் துடிக்கும் தாயின்
சிறப்பற்ற நிலையினையே எண்ணிப் பாரும்;
தாயகத்து வாழ்குடும்ப மக்களெல்லாம்
தண்கடலைக் கடந்திலங்கை, பர்மா சென்று
மாய்கின்ற கீழ்நிலையை நினைத்ததுண்டோ?
மாக்குறளின் வழிதானா நடக்கின்றீர்கள்?

இல்லாத வானகத்தை எண்ணியிங்கே
இன்பஞ்சேர் மண்ணகத்தை மறந்ததாலே
பொல்லாங்கு சேர்ந்ததெனில் மறப்பாருண்டோ?
புகழ்பெற்ற வள்ளுவனார் இல்லா வீட்டை
நல்லதெனக் கூறியதும் உண்டோ? கூறீர்!
இல்லறமே நல்லறமாம்; அறத்தோடின்பம்!
வல்லதொரு வாழ்வுதரும் பொருளில் சேர்ந்தால்
வளமாகும் வாழ்வென்று தானே சொன்னார்?

இன்றுநம்மின் தாயகத்தின் நிலைதானென்ன?
எங்கிருந்தோர் திராவிடத்தை ஆளுகின்றார்?
மண்ணோடு பிறந்தஅன்னை பாலோடிந்த
மாண்புமிகு தமிழ்மொழியை - குறளைத் தந்த
கண்ணான செந்தமிழைக் கொல்ல எண்ணும்
கன்னெஞ்சர் ஆளுகின்றார் நம்மை; அந்தோ!
எண்ணத்தில் இதையெலாம்நீ சிந்திக்காத
இழிவாலே தாயகமே நொந்து போனாள்!

வீரத்தின் விளைநிலமிந் நாடென்றேநாம்
விளக்கின்றோம் நற்கவிதை; வீரமெங்கே?
தீரத்தின் வாழ்விடமித் தமிழ்த்தாயென்று
திசையெங்கும் விரிக்கின்றோம்; தீரமெங்கே?
சோரத்தால் வாழ்வார்க்குத் தலையைத் தாழ்த்தி
சீர்தாயைச் சிறுமைக்கே இழுத்துச் செல்லும்
நேரத்தில் மானத்தை எங்கே வைத்தாய்?
நீர்வாழும் வாழ்வினிலும் சாதல் நன்றே?

தாயின்கை விலங்கினையே தூள்தூளாக்காத்
தீரத்தால் பயனென்ன? குடும்பம் வீழ்ந்து
தீயினிலே அகப்பட்ட எறும்பாய் மக்கள்
திகைத்திடுதல் கண்டிருந்தும் குருட்டு வாழ்வேன்?
நோயினுக்கே விடுதலையாம் மருந்தைத் தந்தே,
நலிந்துவிட்ட தாயகத்தை வாழ வைப்பீர்!
தோய்க்கின்ற குறள்வழியில் குடும்பம் செல்லும்;
தோன்றிட்ட பிணியழியும்; ஓங்கும் வாழ்வே!

கவியரங்கின் கவிகேட்டீர்! தமிழ மக்காள்!
புவித்துயரை அழிக்கின்ற குறளின் வாழ்வைப்
புவியெலாம் பரப்பிடவே வேண்டுமென்றால்
தவிக்கின்ற தாயகத்தில் இன்பம் வேண்டும்;
கவிக்குலமே! அடிமையினை ஒடித்தெறிக்கும்
கவிபாடிக் கவிபாடி மக்கள் உள்ளத்
தவிந்துவிட்ட வீரத்தை எழுப்ப வேண்டும்;
தாயகமே மகிழ்வுபெறும்; தாயும் வாழ்வாள்!

குறிப்பு: தாயகம் என்ற சொல் தாயின் உள்ளம், தாய்நாடு என்ற இரு பொருளையும் ஏற்று வரும்.

— ரவி —

சென்னையில் நாவலர் விழா!

சென்ற 4-8-59 அன்று சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தில் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் எண்பதாவதாண்டு நிறைவு விழா டாக்டர், அ. சிதம்பரநாதர் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. நாவலரின் நல்ல தொண்டுகளை விளக்கி டாக்டர், மா. இராசமாணிக்கனார், திரு. டி. ஏ. வி. நாதன், திரு. சா. அமீது எம். ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மன்றச் செயலாளர்கள், திரு. கா. வேழவேந்தன், பாலகிருட்டிணன் முறையே வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்.

திரு. சா. அமீது அவர்களின் சொற்பொழிவின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:

"நான் நாவலர் பாரதியாரின் வழி வழி வருபவன் என உரிமையோடு கூறிக்கொள்வேன். நாவலர் பாரதியாருக்கு டாக்டர், சிதம்பரநாதன் மாணவர்; அவருக்குப் பேராசிரியர் திரு. க. அன்பழகன் மாணவர்; அன்பழகனுருக்கு நான் மாணவன்."

"நாவலர் பாரதியார் செந்தமிழ்க் கிழவர்; சொல்லேருழவர். நற்றமிழ் வளர்த்த நல்லவர்; வம்பர்களின் வாயடக்குவதில் வல்லவர். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற பாரதியார் வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். வழக்கறிஞராக அவர் விளங்கிய போழ்து தூத்துக்குடியிலும் மதுரையிலும் நல்ல வருவாயோடு தொழில் நடத்திவந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவரை விரும்பி அழைத்தது, தமிழ்ப்பணி புரிய. வழக்கறிஞர் சிலர் வருவாய் இல்லாது வேறு துறை தேடுவதுண்டு வழக்கு கிடைக்காமல், வருவாய் இல்லாமல் வாட்டத்தோடு வாழும் வழக்கறிஞர் உண்டு. அவர்கள் பிறதுறை நாடிச் செல்வதற்கும், நம் நாவலர் தமிழ்த் துறைக்கு வந்ததற்கும் வேறுபாடு உண்டு. தமிழின் பாலுள்ள அன்பாலும் ஆர்வத்தாலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்றார். அன்னை மொழிக்குப் பணி புரிய வந்தார்; பைந்தமிழுலகிற்கு இன்பம் தந்தார்

நாவலர் நாடு போற்றும் நல்ல பேச்சாளராக, பெரும் புலவராக, இலக்கிய உலகின் இணையற்ற எழுத்தாளராக, வாது புரிந்து வாகை சூடும் வல்லவராக, சீர்திருத்தச் செம்மலாக, தென்தமிழ் மொழிக்குத் தீங்கு வந்த நேரத்தில் எரிமலையெனக் கிளம்பி எதிர்த்திட்ட இந்தி எதிர்ப்பு வீரராக, இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைப் போராட்டம் நிகழ்ந்த காலத்தில் சிறந்த அரசியல்வாதியாக, ஆராய்ச்சித் துறையில் அறிஞராக - இங்ஙனம் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்; பாடுபட்டிருக்கிறார். அவர் பட்டபாடு வீண் போகவில்லை. தமிழகத்தில் இன்று தனித்தமிழ் இயக்கம் நல்ல வலுப்பெற்றிருக்கிறது தனித் தமிழ் பேசுபவரைத்தான் தமிழகம் வரவேற்கிறது; வாழ்த்துகிறது.

தனித் தமிழ் தழைக்க வேண்டுமென்றால் இந்திமொழி அழிந்தொழிய வேண்டுமென்பதல்ல, பொருள். தன் அன்னை நன்கு வாழ வேண்டுமென்னும்போது அடுத்த வீட்டு அன்னையாரெல்லாம் அழிந்துவிட வேண்டுமென்று பொருள் படும்?

நம்மொழியில் வீடு என்பதைக் குறிக்க மனை, இல்லம், அகம் என நான்கு நல்ல சொற்கள் உள்ளன. தமிழன் புதுமனை கட்டிப் புதுவாழ்வு தொடங்கும்போது எதற்காக "கிரஹப் பிரவேசம்" என்று கூற வேண்டும்? அது கிரஹப்பிரவேசமா அல்லது கிருஹப்பிரவேசமா, என்றே பலருக்குத் தெரியாது; 'புதுமனை புகுவிழா' என தூய தமிழில் சொல்லி மகிழ்வதில் என்ன தடை? இல்லாதவன் பிச்சை யெடுப்பதில் நியாயமுண்டு? அரண்மனைபோன்ற மாளிகையில் வாழ்ந்து எல்லா வசதிகளையும் பெற்றுத் திகழ்பவனைத் திருவோடு ஏந்தித் தெருவோடு திரியுமாறு சொல்வது மூளைக் கோளாறு. சொல்வளமில்லாத இந்தி போன்ற மொழிகள் பிற மொழிச் சொற்களைக் கொண்டே வாழமுடியும். தனித்தியங்கும் ஆற்றல் தமிழ்மொழிக்கு இயல்பாகவே உண்டு. தனித் தமிழ் இயக்கத்தைத் தாக்க முனைபவரைத் தமிழகம் இனி பொறுக்காது இக்கருத்தை வலியுறுத்துவது போன்று அமைந்துள்ளது நாவலர் பாரதியார் அண்மையில் மதுரையில் நிகழ்த்திய சொற்பொழிவு. தமிழ்ப் பகைவரை ஒழிக்கவே தாம் இன்னும் இளைஞராக வாழ்வதாக அவர் வீரவுரை பகர்ந்துள்ளார். வயது முதிர்ந்தபோதும் வண்டமிழ்த் தொண்டாற்ற வேண்டுமென இளமை முறுக்கோடு திகழும் பாரதியார் பல்லாண்டு வாழ, வாழ்த்துகின்றேன்."

பிறமொழிகளில் கண்ணதாசன் கவிதைகள்.

துணைக் கண்டத்தின் பிறமொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்காக, கண்ணதாசன் கவிதைகள் சிலவற்றை "சாகித்ய அகடாமியி"னர் தேர்ந்தெடுத்துள்ளனர். அதற்கான அனுமதியை ஆசிரியரிடமிருந்து பெற்றுள்ளனர். தமிழ்நாட்டு "சாகித்ய ஆகாடமி"யினரும் தமிழ் தொகுதியில் வெளியிடுவதற்காகக் கண்ணதாசன் கவிதைகள் சிலவற்றைக் கோரிப் பெற்றுள்ளனர்.

"ஆட்டனத்தி — ஆதிமந்தி" காவியம் சிறிது விரிவுபடுத்தப்பட்டு வங்காள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

காரைக்குடியில்

ஏழாவது குறள் விழா!



கடந்த திங்கள் காரைக்குடி, வரலாறு கண்டறியாத விழாவொன்றைக் கண்டது. அவ்வூர்த் திருக்குறட் கழகத்தினர் தம் ஏழாவது குறள் விழாவைக் கடந்த திங்கள் 17, 18, 19 நாட்களில் நடத்தினர். தமிழகத்தின் தலை சிறந்த பேச்சாளர்கள் பலர் கலந்துகொண்டனர். முதல் நாள் "காரியப் பாவையர்" எனும் தலைப்பில் உரைக்கோவையும், இலக்கிய ஓவியக் கண்காட்சியும், குழலிசை விருந்தும் நடந்தன. இரண்டாம் நாள் கவிஞர் முடியரசன் தலைமையில் பட்டி மன்றமும், நடனநாடகமும் நடந்தன. மூன்றும் நாள் கண்ணதாசன் தலைமையில் கவியரங்கமும், "இன்னிசை இளவரசு" முக்கூடல் த. பி. சொ. அரிராம்சேட் அவர்கள் குழுவினரின் இன்னிசை விருந்தும் நடந்தன.

இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சி டாக்டர் அ. சிதம்பரநாதர் அவர்கள் தலைமையில் நடப்பதையும், பேராசிரியர் திரு. க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ., அவர்கள் அமர்ந்திருப்பதையும், திரு அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ. அவர்கள் "வள்ளுவப் பெருநெறி" என்ற தலைப்பிலும் பேசுவதை மேல் படத்தில் காண்க. கீழ்ப்படம், கவியரங்கைச் சுவைக்கத் திரண்டிருந்த மக்களுள் ஒரு பகுதி ஆகும்.

ஆண்டுதோறும் "குறளைப் பறையறைந்து, குமரித்தமிழ் வளர்க்கும்" இக்கழகத்தார், அடுத்த விழாவை, தமது சொந்தக் கட்டடத்தில் கொண்டாட ஆன முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.



உருவகம் :

கிளியும் குருவியும்

காட்டுக் கிளி கூட்டில் அடைபட்ட கதை இது :

ஒரு காட்டில் ஒரே ஒரு குருவி இருந்தது. அந்தக் குருவியோடு ஒரே ஒரு கிளி இருந்தது. குருவியின் சுறுசுறுப்பு கிளிக்குப் பிடித்திருந்தது. கிளியின் அழகு குருவியைக் கவர்ந்திருந்தது. இரண்டும் நல்ல நண்பர்களாக இருந்தன. ஆனால், பிறரைக் கவரும் அழகோடு, குருவிக்குப் பிடிக்காத பண்பு ஒன்றும் கிளியிடம் இருந்தது. அதுதான், கிளி மற்றவர்களை "நகல்" செய்யும் பண்பு. (அதாவது, மற்றவர்கள் சொல்வதைத் திருப்பிச் சொல்லும் பழக்கம்.)

குருவி எத்தனையோ முறை எடுத்துக்காட்டியும் கிளி அதை மாற்றிக்கொள்ளவில்லை; மாற்ற முயற்சி செய்யவும் இல்லை. அதோடு மட்டும் நின்றதா? பெருமை வேறு பேசிக்கொண்டது.

அந்தக் காட்டை அடுத்து ஒரே ஒரு நாடு. அந்த நாட்டில் ஒரே ஓர் அரசன். அவனுக்கு ஒரே ஒரு மகன். அந்த மகன்மீது அரசனுக்கு மிகவும் பிரியம். அவன் விரும்புவதை உடனே செய்யத் தயங்கமாட்டான் மன்னன்.

ஒருநாள், அரசனும் மகனும் அந்தக் காட்டுக்குப் போனார்கள். அங்கே கிளியையும் குருவியையும் பார்த்த இளவரசன், அவற்றைத் தனக்கு விளையாடப் பிடித்துத் தரும்படி அரசனிடம் சொன்னான். மகன் சொல்வதை உடனே செய்பவனல்லவா மன்னன்! வேந்தன் தளபதிக்குக் கட்டளையிட்டான். தளபதி வீரர்களைப் பணித்தான்.

கிளியும் குருவியும் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டன. அங்கே ஒரு கூண்டில் இரண்டையும் அடைத்துப் போட்டார்கள். அவை இரண்டும் தாங்கள் கூண்டில் அடைபட்டுவிட்டதை எண்ணி நெடுநேரம் அழுதுகொண்டிருந்தன.

அரசவையில் ஒரே ஒரு சோதிடன். அவனுக்கு அரசனிடம் செல்வாக்கு அதிகம். அவன் சொன்னவையெல்லாம் நடந்திருப்பதால், அவன் சொல்லுக்கு அரசன் செவி சாய்க்கத் தவறுவதில்லை.

கையில் ஏட்டுச்சுவடியுடன் அங்கு வந்த சோதிடன், பறவைகளையும், அரசன், மகன் ஆகியோரையும், ஏட்டுச்சுவடியின் ஏதோ ஒரு பக்கத்தையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு இவ்வாறு சொன்னான் :

"அரசே! இந்தப் பறவைகள் இங்கே இருக்கக்கூடாது. இவை இங்கு இருந்தால் அரசுக்கே ஆபத்து. ஆகையால் இவற்றைக் காட்டுக்கு விரட்டுங்கள்! இதை நான் சொல்லவில்லை; சோதிடம் சொல்லுகிறது!"

அரசன் மகனைப் பார்த்தான். மகன் சோதிடனைப் பார்த்தான். சோதிடன் திரும்பவும் ஏட்டைப் பார்த்தான்.

"வேண்டுமானால் ஒரு மாற்று இருக்கிறது. இரண்டில் ஏதாவது ஒன்றை வைத்துக்கொண்டு மற்றதை விரட்டிவிடலாம். இதைத் தவிர வேறு வழியில்லை!"—சற்றுநேரம் கழித்து இப்படிச் சொன்னான்

இளவரசன் சிறிதுநேரம் இரண்டு பறவைகளையும் பார்த்தான். கொஞ்சநேரம் யோசித்தான். இரண்டையும் வைத்துக்கொள்ள முடியாததில் அவனுக்கு அதிக வருத்தம். ஆனால் என்ன செய்வது? சோதிடன் சொல்வதைக் கேட்டாக வேண்டுமே! இப்போது இரண்டில் எதை வைத்துக்கொள்வது என்பது அவனுக்கு ஒரு பெரிய பிரச்னையாகிவிட்டது. சிறிதுநேரம் சென்றது. குருவியின் அருகில் சென்றான் இளவரசன்.

'நீ இங்கே இருக்கிறாயா?'- அவன் அதைக் கேட்டான்.

குருவிக்கு அவனுடைய மொழி தெரியாததால், அது பதில் எதுவும் கூறவில்லை,

இரண்டு மூன்று முறை கேட்டும் பதில் வராததால், பிறகு அவன் அதே கேள்வியைக் கிளியிடம் கேட்டான். கிளிக்கும் அந்த மொழி தெரியாதிருந்தாலும், எப்பொழுதும் பிறரை நகல் செய்யும் தனது சுபாவப்படி "நீ இங்கே இருக்கிறாயா?" என்று பதிலுக்குக் கேட்டது அது. அதைக் கேட்ட இளவரசனுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

"அப்பா, அப்பா! இந்தக் கிளி நாம் பேசுவதை அப்படியே பேசுகிறது. இதை வைத்துக்கொண்டு அந்தக் குருவியை விரட்டிவிடுங்கள். இதனோடு நான் நாள்முழுதும் விளையாடிக்கொண்டிருப்பேன்!" என்றான் அவன்.

அதன்படி குருவியை விடுவித்து, கிளியை மட்டும் கூண்டில் அடைக்க உத்தரவிட்டான் அரசன்.

குருவி சுதந்திரமாக வானவெளியில் பறந்து திரிந்தது. கிளியோ அடிமைக் கூண்டில் அடைபட்டு வருந்தியது.

—ப. புகழேந்தி

சென்று மறைந்தாள்!

கவிதைப் பெண்ணவள் -என்றன்
கனவில் வந்தாள்!

கற்பனைத் தேரினில் -இருவரும்
ககனம் சென்றோம்!

நவிலும் கருத்தெலாம் -எந்த
நாளும் மாந்தர்

நலமுடன் வாழ -சிலம்பை
நயமாய் இசைத்தாள்!

"புவிபுகழ்க் குறள்நெறி -உலகில்
பொலிக" என்றாள்

புதுப்பண் பாடினாள் -தென்றல்
புதுமைக் கன்னி!

செவிகுளிர் அமுதம் -இன்னிசைச்
செங்தேன் ஊட்டிச்

செந்தமிழ்ப் பாவை -எங்கோ
சென்று மறைந்தாள்!

— ஓடைப்பட்டி ஏ. எஸ். பி. சிவன்.

விற்பனையாகிறது!

வீழ்ந்துவிட்ட தமிழகமே எழுந்து நில்!

(ஆசிரியர் : புலிக்கொடியான்)

விலை 0-50 காசுகள்.

அன்று வாழ்ந்த தமிழகம் இன்று வீழ்ச்சியுற்றதுஏன்?

காலத்தால் தோன்றிய காளான்களை நாம் இன்னும் வளரவிடத்தான் வேண்டுமா?

ஆண்ட பரம்பரையினரை அழித்து அடிமைகளாக்கிவிட்டனரே; நாம் எழுச்சி பெறுவது எப்போது?

"செந்தமிழ் வீரர்களே! தமிழன்னையின் துயர்துடைக்க வாரீர்!" எனத் தேன் தமிழில் அழைக்கின்றார்.

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.

விபரங்கட்கு :—

முருகன் புத்தக நிலையம்,
202, தம்புசெட்டித் தெரு,
சென்னை-1.

மலேயாவில் கிடைக்கும் இடம் :-

இராயல் புத்தக நிலையம்,
635-A, நார்த் பிரிட்ஜ் ரோடு, சிங்கப்பூர்-7.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு